# ஸ்ரீதாசார்யன்




# கீதாசார்யன்-44

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 4 | துந்துபி௵ | வைகாசி௴ | மே 82 | பகுதி 8



ஆசிரியர்:
M. A வேங்கடகிருஷ்ணன், M A M Phil,

**இயக்குநர் குழு:**

V. C. A. ராமானுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)
N. கணபதி
விற்பனை இயக்குநர்
R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்
P. T. ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு:**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V ராமானுஜம்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா 12/-

அன்புள்ள வாசகரே!

வானமாமலை மடம் 28-வது பட்டம் ஸ்ரீமத்பரமஹம்ஸ சடகோபராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவல்லிக்கேணி விஜயத்தையொட்டி இவ்விதழ் சிறப்பிதழாக மலர்கிறது.

"அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" என்றபடி அடியேனுக்கு சிறுபிராயத்திலேயே கைங்கர்யத்தில் ருசி ஏற்படும்படி கடாக்ஷித்தவர் ஸ்ரீஸ்வாமி.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் திருவல்லிக்கேணி வானமாமலை மடம் ஸ்ரீகார்யமாக எழுந்தருளியிருந்த போது நாலாயிரதிவ்யப்ரபந்த பாசுரங்களைக் கற்கும் பாக்கியம் அடியேனுக்கு ஏற்பட்டது

பின்னர் இளவரசு ஜீயர் ஸ்வாமியாக பீடத்தை அலங்கரித்த போது ஸ்வாமியிடமே பஞ்சஸம்ஸ்காரம் பெறும் பாக்கியமும் ஏற்பட்டது. இப்படி, இருபடியாலும் ஸ்வாமியின் கடாக்ஷத்தை அடியேன் பெற்றதை பெரும் பேறாகக் கருதுகிறேன்.

பஞ்சஸம்ஸ்காரம் பெறுவதற்காக அடியேன் வானமாமலைக்கு விடைகொண்டபோது வழியில் பற்பல திவ்ய தேசங்களை ஸேவிக்கும் பாக்கியம் ஏற்பட்டது. அப்போது, அந்த திவ்ய தேசங்களை பிரகாசப்படுத்தும் வகையில் ஏதாவது செய்யவேண்டுமென்ற எண்ணம் மனதில் உதித்தது. இதைப் பற்றி வானமாமலையில் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியிடமும் விண்ணப்பித்திருந்தேன். அந்த எண்ணத்தின் முழுவளர்ச்சிதான் கீதாசார்யன்.

பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அடிமை கொண்டதோடல்லாமல், கீதாசார்யன் பத்திரிகையின் தோற்றத்திற்கும் ஒரு வகையில் காரணமாக இருந்த ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் இச்சிறப்பிதழை ஸமர்ப்பிக்கிறேன்.

வேங்கடகிருஷ்ணன்



# ஸ்ரீராமாநுஜர் வரலாறு

சாண்டில்யன்

## 1. அவதாரம்

அழகிய அல்லி மலர்கள் பூத்துக் குலுங்கிய கேணியை (புஷ்கரிணியை) உடையதால் திருஅல்லிக்கேணி என்று பிரசித்தி பெற்றதும், பார்த்தசாரதிப் பெருமானின் திருக் கோயிலால் புனிதமானதுமான திருநகரத்திலிருந்து இருபத்து ஆறுவது மைலில் உள்ள ஸ்ரீ பெரும்பூதூர் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில், கலியுகம் 4116, சாலிவாஹன சகாப்தம் 940வது பிங்கள வருஷம் சித்திரை மாதம் சுக்ல பஞ்சமி வியாழக் கிழமையன்று திருவாதிரை நக்ஷத்திரத்தில் நடுப் பகலில் கடக லக்னத்தில் ஹாரீத கோத்ரத்தவரான சர்வக்ரது ஆசுரி கேசவ ஸோமயாஜிக்கும் காந்திமதி என்ற பூமிப்பிராட்டியாருக்கும் திருமகனும், உலகத்தை உய்விக்கும் வேதங்களின் உண்மைப் பொருளை விளக்கவும், இந்த காலத்தில் கூட பெரிய அரசுகளால சாதிக்க முடியாத பெரும் புரட்சிகளை விளைவிக்கவும் அனந்தனுடைய அம்சமாக ஸ்ரீராமானுஜர் அவதாரம் செய்தார்.

அவருடைய அவதாரம் மற்றவர்களுக்குப் புதிதானாலும் அவர் தந்தையான சர்வக்ரது தீக்ஷிதர் ஸோமயாஜிக்கோ, புராணங்களுக்கோ புதிதல்ல. பகவான் தமது தேவியிடத்தில் தனக்கு புத்திரனாய் பிறப்பான் என்று

ஸோமயாஜிக்கு முன்பே தெரியும். அவதார வருஷத்திற்கு முதல் வருஷம் கேசவ ஸோமயாஜி சந்திர கிரகணத்தையொட்டி சமுத்திரத்தில் நீராடி தர்பணம் செய்ய விரும்பி திருவல்லிக்கேணிக்குப் போயிருந்தார். சமுத்திர ஸ்நானம் ஆனதும் ஸ்ரீ பார்த்தசாரதியை சேவித்துப் போக கோயில் பக்கம் வந்த சர்வக்ரது, புத்திரனைப் பிரார்த்தித்து நாம் ஏன் ஒரு யாகம் செய்யக் கூடாது என்று நினைத்தார். பல யாகங்களைச் செய்து எத்தனையோ குடும்பங்களுக்கு க்ஷேமத்தை உண்டாக்கி வைத்ததால் சர்வக்கிரது என்று பட்டப் பெயரடைந்த ஸோமயாஜிக்கு தமக்கும் ஒரு இஷ்டியாகம் செய்யலாம் என்ற யோசனை பிறந்தது. ஆகவே சந்நிதிக்கு எதிரில் ஹோமம் வளர்த்து ஹவிஸைக் கொண்டு இஷ்டியாகம் செய்தார். அன்றிரவு பகவான் சொப்பனத்தில் வந்து "உனது இஷ்டம் சித்திக்கும். உனக்கு நாமே புத்திரனாய் வந்து சேருவோம்" என்று சொல்ல மிகவும் புளகாங்கிதராய் கேசவஸோமயாஜி பெரும்புதூர் வந்து சேர்ந்தார் யாகப் பிரசாதத்தை தமது மனைவியான பூமிப் பிராட்டிக்குக் கொடுத்தார். அன்று முதல் பூமிப் பிராட்டியார் கர்ப்பமுற்று பன்னிரண்டாவது மாதத்தில் ஸ்ரீராமானுஜனைப் பெற்றெடுத்தாள்.

ஸ்ரீராமானுஜருடைய அவதாரம் முன்னதாகவே நிர்மாணிக்கப்பட்டிருந்ததைப் பற்றி பாத்ம புராணம் பின்வருமாறு விவரிக்கிறது.

"இன்னும் நீண்ட காலத்திற்குப் பின்பு பகவானே உலகத்தில் ஒரு திரிதண்ட சந்நியாசியாக அவதாரம் செய்து தர்மத்தை நிலை நிறுத்துவான். அந்தக் காலத்தில் நாஸ்திகர்களும் கிருத்ரிம புத்திமான்களும் மனிதர்களுடைய புத்தியைக் குழப்பியிருப்பார்கள். திறமையான வாதங்களினால் பலவகை தத்துவங்களினாலும் வேதாந்தத்தைப் போலவே காணப்படும் பொய்களும் மனிதர்களின்

மனங்களை பரமாத்மாவான விஷ்ணுவிடமிருந்து ஈர்த்து விடும். இதனால் மக்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய குண விசேஷங்களை மறந்து போவார்கள். இத்தகைய சமயத்தில் பக்த கோடிகளின் அதிர்ஷ்டத்தால் மேற் சொன்ன உன்னதமான அவதாரம் ஏற்படும். அந்த திரிதண்டி சந்நியாச அவதாரம் மஹரிஷி பாதராயணருடைய உபதேசங்களையும் கொர்த்தங்களையும் உபதேசிக்கும். அந்த தெய்வ புருஷர் வியாச சூத்ராங்களுக்கு பாஷ்யம் எழுதி உலகத்தைப் புரட்டு வாதங்களிலிருந்து மீட்டு உண்மைப் பாதைக்குத் திருப்பு வார்''

இது தவிர நாரதீய புராணமும் ஸ்ரீ ராமானுஜ அவதாரத்தை முன் கூட்டியே சுட்டிக்காட்டுகிறது: ''அனந்தஃ ப்ரதமம் ரூபம், லக்ஷ்மணச்சததப்பர:, பலபத்ரஸ் த்ருதீயாஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி'' என்பது புராணவாக்கியம்.

இப்படிப் புராணங்களாலும் மகான்களாலும் எதிர் பார்க்கப்பட்ட புரட்சிப் பிழம்பாக ஸ்ரீ ராமானுஜன் கி.பி 1017வது ஆண்டில் அவதாரம் செய்தார்.

(தொடரும்.)

---

WITH BEST COMPLIMENTS FROM

*

Sree Meenakshi Foil Prints
D. S. & Co., (Sree Prees)

71, G. N. Chetty Road,
T. Nagar, MADRAS - 600 017.

Phone : 443959

# கல்வெட்டுக்களில் வைணவம்

– Dr. K. V. ராமன்

## 2. சங்கர்ஷண-வாசுதேவர் வழிபாடு

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் மௌரியர் நாட்டுத் தலைநகரான பாடலிபுத்திரத்திற்கு விஜயம் செய்த மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்க நாட்டுத் தூதுவன் வட இந்தியாவில் மதுரா போன்ற பகுதிகளில் வாசுதேவரது வழிபாடு சிறப்புற்றிருந்ததைக் குறித்துள்ளார். இதை உறுதிப்படுத்தும் வகையில் அவரது வழிபாட்டைக் குறிக்கும் பல கல்வெட்டுக்கள் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மத்தியப்பிரதேசத்திலுள்ள பெஸ் நகரில் கிடைத்த கல்வெட்டைப்பற்றி முன்னே பார்த்தோம். இக்கட்டுரையில் ராஜஸ்தானில் கிடைத்துள்ள கல்வெட்டுகளைப் பற்றி ஆராய்வோம்.

ராஜஸ்தானில் சித்தூர்கரிலிருந்து சுமார் 8 மைல் தொலைவிலுள்ள நகரிக்கு அருகாமையில் ஹாதிபாடா என்னும் சிற்றூர் உள்ளது. அங்கே ஒரு பெரிய கற்பலகையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கி. மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சாசனத்தின் மற்றொரு பிரதி நகரியிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள கோசுந்தி என்னும் இடத்தில் கிடைத்தது. இக்கல்வெட்டை 1934-35 ஆக்-

ஆண்டில் திரு. என். பி. சக்ரவர்த்தி என்பவர் கண்டெடுத்தார். தற்போது இக்கல்வெட்டு உதைபூர் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதன்படி காஜாயன சர்வதாதன் என்னும் அரசன் சங்கர்ஷண வாசுதேவர்களது கோயிலைச் சுற்றி பூஜா சிலாபிராகாரத்தைக் கட்டியதாக கூறப்படுகின்றது. இக்கல்வெட்டின் வாசகம் பின் வருமாறு :

**1. காரிதோ-யம் ராஜ்ஞா பாகவதேன காஜாயனேன பாராசரீபுத்ரேண**

**2. சர்வதாதேன அசுவமேத யாஜ்ஞா பகவதாப்யாம் சங்கர்ஷண வாசுதேவாப்யாம்**

**3. அநிஹதாப்யாம் ஸர்வேச்வராப்யாம் பூஜாசிலா பிராகாரோ நாராயண வாடிகா.**

பராசர கோத்திரத்தைச் சார்ந்தவளின் மைந்தனும், பாகவதனும், அஸ்வமேதயாகம் செய்தவனுமாகிய சர்வதாதா என்ற காஜாயன அரசன், எவராலும் வெல்ல முடியாத அனைத்திற்கும் தலைவர்களான, சங்கர்ஷண வாசுதேவர் என்ற கடவுளர் இருவருக்கும் பூஜைக்குரிய நாராயண வடிகத்தைச் சுற்றி மூடிய சுற்றுச்சுவரை அமைத்தான்.

''பூஜாசிலாப் பிராகாரம்'' என்பதைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. சங்கர்ஷண வாசுதேவர் சாளக்கிராம வடிவிலே வழிபடப்பட்டனர் என்பதை இது குறிக்கும் என்று திரு கோஷ் என்னும் அறிஞர் கருதுவார். ஆனால் பண்டார்க்கர் என்னும் வரலாற்று அறிஞர் சங்கர்ஷணரும் வாசுதேவரும் அவர்களது பாதவடிவத்தில் வழிபடப்பட்டனர் என்கிறார். இதற்குச் சான்றாக ஹாதிபாடாவிலேயே ''ஸ்ரீவிஷ்ணு பாதங்களுக்கு நமஸ்காரம்'' என்று மொழிகின்ற கல்வெட்டு கிடைத்துள்ளதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இப்பிராகாரத்தை அமைத்த அரசன் சர்வதாதாவைப் பற்றிச் சிறிது காண்போம். இவன் காஜாயன வம்சத்தைச் சார்ந்தவன். இவனது தாய் பராசர கோத்திரத்தைச் சார்ந்தவள். இவன் அசுவமேதயாகம் புரிந்தவன். மத்ஸ்ய புராணத்தில் காஜாயன என்ற கோத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இவ்வரசன் கண்வர் அரச மரபைச் சார்ந்தவன் என்றும் திரு கோஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆக இக்கல்வெட்டின் மொழி, எழுத்து அமைப்பு அரசரின் பெயர் இவற்றைக் கொண்டு இக்கல்வெட்டின் காலம் கி. மு. **135** முதல் 35 ஆக இருக்கவேண்டும் என்று அறுதியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு:** சென்ற இதழில் பக்கம் 47-ல் ''பிரசித்த பெற்ற நாளந்தா பல்கலைக்கழகம்'' என்று தவறாக அச்சாகியிருக்கிறது. ''பிரசித்தி பெற்ற தக்ஷசீலப் பல்கலைக் கழகம்'' என்று திருத்தி வாசிக்க.

Anything & Everything in

Real Estates

(Buying & Selling Properties)

Civil Constructions

Please Contact

**Minerva Enterprises**

2, Narayanan Street,

Mahalingapuram,

Nungambakkam, MADRAS-600 034.

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

நித்யமாய் திடப்ரமாணமாயுள்ள வேதமும், அதை யொத்த ப்ரமாணமான தமிழ் மறை எனப்படும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும், எம்பெருமானால் நேர்முகமாக வெளியிடப்பட்டதால் உயர்ந்தப்ரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஸ்ரீபாஞ்சராத்ரமும், ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் என்ற இதிஹாஸங்களும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்ரீபாகவதம் போன்ற ஸாத்விகபுராணங்களும் நமக்கு நிலையான ப்ரமாணங்களாகும். இவை எல்லாவற்றிலும், பாகவதோத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸதாசார்யனிடம் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டுள்ளது.

**ஆசார்யஸ்ஸஹரிஸ் ஸாக்ஷாத்** என்கிறபடி ஆசார்யனாவன் எம்பெருமானின் ஸாக்ஷாதவதாரம் என்ற நம்பிக்கை அவச்யம் வேண்டும். அவரவர் குலத்திற்கு வாய்த்துள்ள ஆசாரியனை அறிந்து மேற்சொன்ன விச்வாஸத்துடன் அவரை அணுகி ப்ரார்த்தித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெறவேண்டும். **ஸமாச்ரயணம்** என்று சொல்லப்படும் இந்த பஞ்சஸம்ஸ்காரம் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுக்கும் (பெண்கள் உள்பட) வைஷ்ணவஜன்மாவை அமைத்துத் தருகிறது.

பஞ்சஸம்ஸ்காரம் என்பது (1) தாபம் (2) புண்ட்ரம் (3) நாமம் (4) மந்த்ரம் (5) யாகம் என்ற ஐந்து ஸம்ஸ்காரங்களை (சடங்குகளை) உள்ளடக்கியது. தாபம் என்பது

திருவாழி திருச்சங்கு அடையாளங்களை அக்நி மூலம் பெறுதல்; புண்ட்ரமாவது திருமண்காப்பணிதல்; நாமமாவது பெயர் சூட்டப்பெறுவது; மந்த்ரமாவது ரஹஸ்யமான ஸ்ரீவைஷ்ணவ மந்த்ரங்களை ஆசார்யனிடம் உபதேசமாகப் பெறல்; ப்ரபத்தி என்பது இதில் அடங்கி விடுகிறது; யாகம்-பகவதாராதனத்திற்கு யோக்யராதல்.

ஸ்ரீவைஷ்ணவனுடைய பாஹ்யலக்ஷணங்களை (வெளியடையாளங்களை) முன்னமேயே விவரித்தோம். புஜங்களில் எம்பெருமானின் திவ்யாயுதங்களான திருவாழி, திருச்சங்கு இவைகளின் அடையாளங்கள்; பளிச்சென்று விளங்கும் திருமண்காப்பு; துளசிமணி தாமரைமணி மாலைகள் முதலானவை.

**தாபஸம்ஸ்காரத்தில்** ஆசாரியன் திருவாழி திருச்சங்குகளின் அடையாளங்களை அதற்கென்று வளர்த்த பவித்ரமான ஹோமாக்நியில் காய்ச்சி அதை சிஷ்யனின் புஜங்களில் ஒற்றுவதால் அடையாளம் பண்ணுகிறார். *தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்* என்று பெரியாழ்வார் திருவாக்கு. **பவித்ரமித்யக்நி। அக்நிர்வை ஸஹஸ்ராரா। ஸஹஸ்ராரநேமி:। நேமிநாதப்ததநுர் ப்ரஹ்மணஸ்ஸாயுஜ்ய மவாப்நோதி ஸலோகதாமாப்நோதி।** என்று ச்ருதி. இது போல பலவசனங்களுண்டு. தீயிற்பொலிகின்ற திருவாழி திருச்சங்குகளாலே ஒற்றுண்டவன் பரமபுருஷனின் பதத்தை (ஸ்ரீவைகுண்டத்தை) நிச்சயமாக அடைகிறான் என்கிறது ஸாமவேதம். இப்படி ஆசார்யன் ஸுதர்சன பாஞ்சஜந்நிய சின்னங்களால் அடையாளம் செய்துவைப்பது ஒரு முக்கியமான வைதிக, வைஷ்ணவ ஸம்ஸ்காரம் ஆகும்.

திருமண்காப்பணிபவன் முக்தியடைகிறான் என்பதற்கு ப்ரமாணம், **ஹரே; பாதாக்ருதிம் ஆத்மநோஹிதாய மத்யேச்**

**சித்ர மூர்த்த்வபுண்ட்ரம் யேதாரயதி ஸ பரஸ்யப்ரியோபவதி: ஸமுக்தவாங்பவதி** என்னும் வேதவாக்கியம், "எவன் ஆத்மக்ஷேமத்திற்காக ஹரியின் (எம்பெருமானின்) திருவடிகளை யொத்த ஊர்த்வபுண்ட்ரங்களை (மேல் நோக்கிச் செல்லும் கோடுகளாக அமைந்த திருமண்காப்பை) மத்தியில் இடைவெளியுடன் (ஸ்ரீசூர்ண ரேகையுடன்) அணிகிறானோ அவன் பரமபுருஷனுக்கு ப்ரியனும் தூய்மையுற்றவனும் மோக்ஷத்துக்கு ஏற்றவனாக ஆகிறான்" என்கிறது இந்த ப்ரமாணம்.

வைஷ்ணவக் குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் நெற்றியில் திருமண் அணிவது மரபு. ஆயினும் ஸமாச்ரயண காலத்தில் ஆசாரியன் தமது திருக்கையால் நமது உடலில் உசிதமான இடங்களில் திருமண் ஸ்ரீசூர்ணம் இடுவது **புண்ட்ர ஸம்ஸ்காரம்.** மணவாளமாமுனிகளின் தினசர்யையில், **ஊர்த்தவபுண்ட்ரை ருபச்லிஷ்டம் உசிதஸ்தாந லக்ஷணை:** (திருமேனியில் உசிதமான விதிக்கப்பட்ட) இடங்களில் இயற்கையாய் விளங்கும் சோபையுடன் பன்னிருதிருநாமம் அணிந்து விளங்குவது) போற்றப் படுகிறது ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி! என்று எதிராசன் போற்றப்படுவதும் காண்க.

**நாம ஸம்ஸ்காரமாவது — ராமாநுஜதாசன், ஸ்ரீவைஷ்ணவதாசன், மதுரகவிதாஸன்** போன்ற தாஸ்யநாமத்தை ஆசாரியனால் சூட்டப் பெறுவது. பெரியோர்களை தண்டன் ஸமர்ப்பித்து வணங்கும் போது **அடியேன் ராமாநுஜ தாஸன்** போன்று தாஸ்யநாமாவை அவர் காது படும்படி சொல்லிக் கொள்ளவேண்டும்.

**மந்த்ர ஸம்ஸ்காரமாவது —** திருமந்திரம் (திருவெட்டெழுத்து) அதன் விவரணமான த்வயம், சரமஸ்லோகங்கள்

(தொடர்ச்சி 49-ம் பக்கம்)

**சிறுவர் பகுதி**

# ஸ்ரீபராசார பட்டர்

**பூமிகா**

**தாத்தா :** உட்காருங்கள் குழந்தைகளே! இந்த மாதம் நான் யாரைப் பற்றிக் கூறப்போகிறேன் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

**ஸ்ரீதேவி :** இது வைகாசி மாதமாதலால் நம்மாழ்வாரைப் பற்றித்தானே கூறப்போகிறீர்கள்.

**தாத்தா :** இல்லை, இல்லை. போனமாதமே நம்மாழ்வாரைப் பற்றிக் கூறிவிட்டதால், இந்த மாதம் அவதரித்த ஆசாரியரான ஸ்ரீபராசரபட்டரைப் பற்றிக் கூறுகிறேன். கேளுங்கள். எம்பெருமானாருடைய சிஷ்யர்களில் முதல்வரான கூரத்தாழ்வானுக்கும், அவருடைய தேவிகளான ஆண்டாளுக்கும் வைகாசி அனுஷத்தில் பிறந்தவர் பட்டர். இவர் பிறந்ததே ஒரு தனிக்கதை.

**நாராயணன் :** ஆண்டாளா? ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியுள்ள ஆண்டாள் ஸ்ரீரங்கநாதனைத் தானே மணந்து கொண்டாள் தாத்தா? நீங்கள் சொல்வது ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருக்கிறதே.

**தாத்தா :** நல்ல கேள்வியப்பா. இந்த ஆண்டாள் வேறு, அந்த ஆண்டாள் வேறு. சரி கதைக்கு வருவோம்.

கூரத்தாழ்வான் தினமும் உஞ்சவ்ருத்தி செய்து தான் உண்பார். ஒரு நாள் நல்ல மழை காரணமாக அவரால் உஞ்சவ்ருத்திக்குச் செல்ல முடியவில்லை. அன்று அவரும் ஒரு பழத்தை பெருமாளுக்கு அமுது செய்துவிட்டு, திருவாய்மொழி அநுசந்தானம் செய்து பட்டினியோடே சயனித்துக் கொண்டிருந்தார்.

**கண்ணன் :** உஞ்சவ்ருத்தி என்றால் என்ன தாத்தா?

**தாத்தா :** உஞ்சவ்ருத்தி என்பதாவது நாலைந்து வீடுகளுக்கு சென்று பிக்ஷை எடுப்பது தான். அன்று அவர் பட்டினியோடு இருந்த போது, கோயிலில் பெருமாளுக்கு அரவணை ப்ரஸாதம் அமுது செய்து, திருச்சின்னம் சேவிக்கும் ஒலி கேட்டது. அப்போது ஆண்டாள் மனதிற்குள் உமது பக்தர் பட்டினியால் கிடக்க, நீர் மட்டும் குலாவிக் குலாவி அமுது செய்து அருளுகிறீரோ? என்று நினைத்தாள்.

**ஸ்ரீதேவி :** அப்படி நினைப்பதால் என்ன பயன்? அவள் அவ்வாறு நினைத்தவுடன் அழகிய மணவாளன் பிரசாதத்தை அவர்களுக்கு கொடுத்தனுப்புவாரா என்ன?

**தாத்தா :** நீ விளையாட்டாகக் கேட்டாலும் உண்மை அதுதான். ஆண்டாள் அவ்வாறு நினைத்தவுடன் அழகிய மணவாளனும் உத்தம நம்பியின் கனவிலே தோன்றி 'நம்பீ! ஆழ்வான் பட்டினி கிடக்கிறார். ஆகவே அரவணைப் ப்ரஸாதத்தைக் கொண்டு போய் அவருக்குக் கொடும்" என்று நியமித்து அருளினார். நம்பியும் அதனை கூரத்தாழ்வானிடம் கொண்டு போய் கொடுக்க, அவர் அதில் இரண்டு இரவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியை ஸ்ரீபண்டாரத்திற்கு அனுப்பிவிட்டார். அந்த ப்ரஸாதத்தை தாமும் ஏற்றுக் கொண்டு, ஆண்டாளுக்கும் கொடுத்தார். புத்ர காமேஷ்டி யாகத்தில் கிடைத்த பாயஸத்தினால் தசரதருக்கு 4 பிள்ளைகள் பிறந்தது போல், கூரத்தாழ்வானுக்கும்,


இந்த திருவிளக்கினுல் பட்டரும், ஸ்ரீராமப்பிள்ளையும் பிறந்தனர். பட்டர் சிறிய வயதிலேயே ஸர்வக்ஞபட்டரை வென்றிருக்கிறர். அந்தக் கதை உங்களுக்குக் கூட தெரிந்து இருக்குமே.

**கண்ணன் :** ஸர்வக்ஞ பட்டர் கதைதானே? நான் சொல்கிறேன் தாத்தா. ஒருநாள் பட்டர் தம்வயதுப் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருக்கும் போது அவ்வழியே பல்லக்கிலே வெகு ஆடம்பரத்தோடு ஸர்வக்ஞ பட்டர் வந்து கொண்டிருந்தார். பட்டரும் அவருடைய ஸர்வக்ஞத்வத்தை பரிசோதிக்க எண்ணி, கையில் ஒரு பிடி மண்ணை எடுத்துக் கொண்டார்.

**தாத்தா :** இப்போது நான் கதைக் கேட்டுக் கொண்டிருப்பதால், உங்களைப் போல் நானும் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். ஸர்வக்ஞன் என்றல் என்ன அர்த்தம் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்,

**நாராயணன் :** ஸர்வக்ஞன் என்றல் எல்லாம் அறிந்தவன் என்று எங்களுக்குத் தெரியும் தாத்தா. ஆனல் இந்த கதை எனக்குத் தெரியாது. ஸ்ரீதேவி, நீஇக் கதையை நீ சொல்கிறயா?

**ஸ்ரீதேவி :** ஒரு பிடி மண்ணை கையில் எடுத்துக் கொண்ட பட்டர் ஸர்வக்ஞ பட்டரின் பல்லக்கின் முன் சென்று, ஐயா இது எவ்வளவு மண்? என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?, என்று புன்னகைத்துக் கொண்டே கேட்டார். ஸர்வக்ஞ பட்டர் ஒன்றும் தெரியாமல் தலை கவிழ்த்து நிற்க உடனே பட்டரும் மண்ணைக் கீழே கொட்டிக் கொண்டே, இது நல்ல ஸர்வக்ஞத்வம். இது ஒரு கைப்பிடியளவு மண் என்று குழந்தை கூட சொல்லிவிடுமே' என்று சொல்லிச் சிரித்தார். அவ்வளவு தானே தாத்தா?



**தாத்தா :** பரவாயில்லையே. இவ்வளவு தூரம் தெரிந்து வைத்துக் இருக்கிறீர்களே, மீதியை நான் சொல்கிறேன். ஸர்வக்ஞரும் தன்னுடைய அறியாமைக்கு வெட்கப்பட்டு பட்டரின் காலில் விழுந்து வணங்கினர். பிறகு அங்குள்ளோரை 'இவர் யாருடைய குமாரர்?' என விசாரித்தார். 'ஆழ்வானுடைய குமாரர்' என்று சொல்லக் கேட்டு, பறப்ப தன் குட்டி தவழுமோ? என்று கூறி பட்டரை தன் பல்லக்கிலே வைத்துக் கொண்டு ஆழ்வான் திருமாளிகையில் விட்டுச் சென்றார். மேலும் இவருக்கு 'ஸ்ரீரங்கநாதபுத்திரர்' என்று மற்றொரு பெயரும் உண்டு.

**கண்ணன் :** இவருக்கு ஏன் அந்த பெயர் வந்தது தாத்தா?

**தாத்தா :** பட்டரின் இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் பட்டரைத் தனது புத்திரனாக ஏற்றுக் கொண்டு தன்னுடைய சந்நிதியிலேயே திருமணத் தூணின் அருகே தொட்டிலிட்டு சீராட்டி வளர்த்து வந்தார். மேலும் அக் குழந்தை தவழ்ந்து சென்று பெருமாள் அமுது செய்தற்கு முன்னமே, அமுது செய்தாலும், அதனையும் பிரியமாக ஏற்றுக் கொள்வார் ஸ்ரீரங்கநாதர். இப்படி ஸ்ரீரங்கநாதரின் அபிமான புத்திரராக வளர்ந்தமையால் 'ஸ்ரீரங்கநாத புத்திரர்' என்று வழங்கப்பட்டார். இப்படியே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக இவர் வளர, இவருடைய ஞானமும் சிறந்து விளங்கியது. ஸ்ரீராமாநுஜர் தமக்குப் பிறகு ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்க்கும் பொறுப்பை பட்டரிடம் ஒப்படைத்தார். பட்டரும் பற்பல வித்வான்களை வாதில் வென்று திருத்திப் பணி கொண்டு ஸ்ரீ-வைஷ்ணவர்களாக்கினர். நஞ்சீயரைத் திருத்தி பணி கொண்டதும் பட்டர் தான்.

**நாராயணன் :** நஞ்சீயர் கதையை நீங்கள் முன்னமே எங்களுக்கு சொல்லி விட்டதால் வேறு விஷயத்தை கூறுங்கள் தாத்தா.

**தாத்தா :** அப்படிக் கேளடா என் ராஜா. பகவத் கைங்கர்யத்தை விட பாகவத கைங்கர்யமே உசத்தி என்பதை பட்டர் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். அதைச் சொல்கிறேன்.

**கண்ணன் :** அதாவது திருமாலை வணங்குவதை விட அவனடியார்களை வணங்குவதை தான் உசத்தி என்கிறாரா? அது எப்படி இருக்க முடியும் தாத்தா? திருமாலடியார்களை வணங்கினால் அவ்வடியார்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் அது எப்படி பகவானுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் தாத்தா?

**தாத்தா :** இதைத்தான் ஓர் அரசனும் பட்டரிடம் கேட்டான். அதற்கு பட்டர் 'உன் நாட்டு மக்கள் உன்னை வணங்கினால்? 'என்று கேட்க அவ்வரசனும் மகிழ்ச்சியடைவேன்' என்று கூறினான். அடுத்து பட்டர் 'உன்னுடைய பாதரக்ஷைகளை வணங்கினால்?' என்று கேட்டார். அதற்கு அவ்வரசனும் 'இரட்டிப்பு மகிழ்ச்சியடைவேன்' என்று கூறினான். அதற்கு பட்டர் காரணம் கேட்க 'என் காலணிகளிடமே அவ்வளவு பக்தி கொண்டுள்ள மக்கள், என் மேல் எவ்வளவு அன்பு வைத்திருப்பார்கள்' என்று அரசன் கூறினான்.

**ஸ்ரீதேவி :** சரியாகத்தான் சொல்லியிருக்கிறான் அரசன். அதற்கு பட்டர் என்ன பதில் கூறினார் தாத்தா?

**தாத்தா :** அதற்கு பட்டரும் அதைப் போலத்தான் இதுவும். திருமாலடியார்களிடமே அவ்வளவு பக்தி கொண்டுள்ளவர்கள், திருமாலிடம் எவ்வளவு பக்தி கொண்டிருப்பார்கள் என்று புரியவில்லையா? என்று கூற அரசனும் தன் அறியாமையை எண்ணி மனம் திருந்தினான். இப்படிப் பலரைத் திருத்திப் பணிகொண்ட பட்டரின் உயர்ந்த குணத்தைப் பற்றிய ஒரு கதையை கூறுகிறேன் கேளுங்கள். பட்டர் ஸ்ரீரங்கநாதருடைய ஸ்வீகாரப் புத்திரனாக வளர்ந்த

மையால், அவருக்கு கோயிலில் எங்கும் எப்போதும் உள்ளே போகும் அநுமதி இருந்தது. ஒருநாள் கோயிலில் திரை சாத்தியிருந்த போது, பட்டர் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே செல்ல முயன்றார். அப்போது அவரைத் தடுத்து நிறுத்திய கோவில் அதிகாரி அவரை கடுஞ்சொற்களால் சாடினார்.

**நாராயணன் :** கோயில் அதிகாரி பட்டரையா கடுஞ்சொற்களால் சாடினார்? பட்டர் அதிகாரி மேல் கோபம் கொள்ளவில்லையா தாத்தா?

**தாத்தா :** நாமாக இருந்தால் நிச்சயம் கோபம் கொண்டிருப்போம். ஆனால் பட்டரோ சிறிதும் கோபம் கொள்ளாமல் 'பெருமாளைச் சேவிக்கச் செல்லும்போது, நாம் நம்மிடமுள்ள குறைகளை பெருமாளிடம் முறையிட வேண்டும். ஆனால் அடியேனுக்குப் பிரதிநிதியாக இருந்து அடியேனிடமுள்ள குறைகளைத் தாங்கள் எம்பெருமானிடம் விண்ணப்பித்து விட்டீர்கள். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்' என்று கூறித் தான் அணிந்திருந்த சால்வையை எடுத்து அவருக்குப் போர்த்தினார். உடனே கோயில் அதிகாரியும் பட்டருடைய உயர்ந்த குணத்தை உணர்ந்து அவர் காலில் விழுந்து வணங்கினார்.

**கண்ணன் :** ஒரு சந்தேகம் தாத்தா. இவர் எந்த நூல்களையும் அருளிச் செய்யவில்லையா?

**தாத்தா :** ஏன் அருளிச் செய்யவில்லை? இவர் ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸ்ரீகுணரத்நகோசம், எனும் ஸ்தோத்திரங்களையும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு வ்யாக்யானமும், அருளிச் செய்துள்ளார். மேலும் இவர் நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களுக்கு அருளியுள்ள விளக்கங்கள் மிகமிக அருமையானவை. இப்போது சொன்னால் அவை உங்களுக்குப் புரியாது தகுந்த 'காலத்தில் அவைகளை வாசித்து உங்கள் ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள். பட்டர் தமது 52வது வயதில் பரமபதம் அடைந்தார். மேலும் பட்டரைப் பற்றிக் கூறவேண்டுமானால் எவ்வளவோ கூறலாம். இப்போது நாழியாகி விட்டபடியால் சமயம் வரும் போது உங்களுக்குக் கூறுகிறேன். நீங்களும் பட்டரைப் போல உயர்ந்த குணமும், சிறந்த ஞானமும் பெற்று வாழ்வீர்களாக.

# திருவரங்கன் உலா

### ஸ்ரீவேணுகோபாலன்

## 22, மேல் நாட்டு விஜயம்

அதன் பிறகு எல்லாரும் யோசனையில் ஆழ்ந்தார்கள். இனியும் அந்த ஊரில் இருப்பது பிரயோசனமில்லை என்று உணர்ந்தார்கள்.

இனி எங்கே போவது என்பதைக்குறித்து சர்ச்சை நடத்தினார்கள்.

பல இடங்களைக் குறித்துப் பேசிய பின், கன்னட தேசத்திலுள்ள திருநாராயணபுரத்திற்குப் போய் விடுவது என்றும் அதற்குள் தமிழ்த் தேசம் சீரானால் பழையபடி அரங்கத்துக்கே திரும்பி விடலாம் என்றும் தீர்மானித்தார்கள்,

ஊர்வலம் மீண்டும் கோழிக் கூட்டை விட்டுப் புறப்பட்டது.

நம்மாழ்வாரும், ஊர்வலத்தாரும், அரங்க ஊர்வலத்தாரும் இந்த நீண்ட நெடு மாதங்களில் அத்தியந்தர்கள் ஆகி விட்டதால், ஒருவரை விட்டு ஒருவர் பிரிய ஒண்ணுமல் ஒன்று சேர்ந்தே சென்றார்கள்.

பல நாழிகை தூரம் நடந்த பின், வழியில் பெரிய உப்பங்கழி ஒன்று எதிர்ப்பட்டது. மறு கரை தெரியாத அளவு, சமுத்திரம் போல் அது வியாபித்திருந்தது. அந்தக்

வழியைக் கடப்பதற்கு ஊர்வலத்தார் ஓடங்களை அமர்த்திக் கொண்டார்கள்

பின்னர் இரு தரத்தாரும் ஒன்ருகப் பயணம் செய்து திருக்கிருும்பியை (கர்நாடகத்தில், குண்ட்லுபேட் என்ற தாலுகாவில் இருக்கும் வைணவத் தலம்) அடைந்து அங்கு சிறிது காலம் தங்கி இருந்தார்கள்.

அதன் பின்னர் அரங்க ஊர்வலத்தார் திருநாராயண புரத்தை நோக்கிப் பிரயாணம் செய்ய விரும்ப மாட்டார் கள். ஆனல் ஆழ்வாரின் ஊர்வலத்தார் அதற்கு பிரியப் படாமல் இருக்க, இரு தரத்தாருக்கும் அபிப்பிராய பேதங் கள் முளைத்து எழுந்தன.

கடைசியில் அரங்க ஊர்வலத்தார் ''நீங்கள் உங்கள் வழியே செல்லுங்கள்! நாங்கள் எங்கள் வழி போகிறேம்'' என்று கூறிக்கொண்டு திருநாராயணபுரம் போகும் மார்க் கமாகப் புங்கனூரை போய் அடைந்தார்கள்.

பின்னர் ஆழ்வாரின் ஊர்வலத்தார் ஆழ்வாரை அழைத்துக் கொண்டு வேறு திசையாகச் சென்று ஒரு கிரா மத்தை அடைந்தார்கள். அங்கிருந்து மேற்கு நோக்கிப் புறப்படும் தருவாயில் கிராமத்தார் ஓடோடி வந்து, ''சுவாமிகளே! மேற்கே கள்வர் கூட்டத்தார் நிரம்ப இருக்கி ருர்களே அவ்வழி போவது சரியில்லையே? என்று கூறினார்கள். ''கிழக்கே போகலாமா?'' என்று ஊர்வலத்தார் கேட்க, ''அங்கேயும் கள்வர்கள் உண்டு. விலையுயர்ந்த ஆபரணங் களையும் பொக்கிஷங்களையும் நீங்கள் கொண்டு போகிறீர் கள், நீங்கள் வந்துள்ள இடம் சரியான இடமில்லை. இனி நீங்கள் வடக்கே போவதற்கும் வழி இல்லை. அங்கே துருக் கியர்கள் இருக்கிருர்கள், கடற் கொள்ளைகாரர்களும் இருக் கிருர்கள்'', என்று தெரிவித்தார்கள்.

பின்னர் ஊர்வலத்தார் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து ஆழ்வாரைத் தென் மேற்குத் திசையில் அழைத்துச் செல்லத் தீர்மானித்தார்கள்.

பச்சிளங்காலையில் புறப்பட்டு, அந்தத் திசையில் பிர யாணம் செய்ய எச்சரிக்கையாக முன்னே இருவரும், பின்னே இருவரும் வெகு தூரம் இடைவெளி விட்டு நடந்து போனார்கள்.

சிறிது தூரம் சென்ற பிறகு, பின்னால் சென்ற எச்சரிக் கையாளர்கள் ஓடோடி வந்து, "பெரியீர்காள்! நாம் போவ தைக் கள்வர்கள் வேவு மூலம் அறிந்து விட்டார்களே! பின்னால் அவர்கள் பெரும் கூட்டமாய் நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். தனிமையான இடத்தில் நம்மை மடக்கி விடுவார்களே!" என்று கூறினார்கள்.

பரிவாரங்கள் எல்லாம் பதைபதைத்துப் போய் குழம்பி னார்கள்.

அப்போது ஒருவர் எழுந்து, "பெரியீர்காள்! நாமும் அரங்கனது ஊர்வலத்தோடேயே சென்றிருக்க வேண்டும்! அப்படிச் செய்யாதது நம் தவறு. இப்போது நம்மை ஆபத்து நாலா பக்கங்களிலும் சூழ்ந்திருக்கிறது. இந்நிலை யில் ஆழ்வாரை எந்தத் திசையில் அழைத்துச் சென்றாலும் கஷ்டப்படுவோம். கள்வர்கள் நம்மை தொடர்ந்து வருகிறார் கள். ஆகவே இதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி, ஆழ்வா ரை எங்கேயாவது மறைத்து விட்டு நாம் எல்லாரும் தனித் தனி ஆட்களாக நடந்து அவரவர்க்கு விருப்பமான ஊர் களுக்கு போய் விடுவோம். பின்னால் எப்போது நாடு சீர் அடைகிறதோ அப்போது நாம் ஆழ்வாரை எடுத்துக் கொள்ளலாம்"

எல்லாரும் இதை ஆமோதித்து விட ஆழ்வாரை மறைத்து வைக்க வசதியான இடத்தை யோசிக்கலானார்கள்.

அப்போது ஒருவர், "சுவாமிகளே; அதோ நமக்கு எதிரே அதி உயரமான முந்திரிப்பு மலை தென்படுகிறதே இந்த மலையில் ஆழ்வாரை மறைத்து விடுவது நல்லது!" என்று கூறினார்.

அதைப் பலரும் ஆமோதிக்கவே, உடனே எல்லாரும் அதிவிரைவாக மலையை நோக்கிப் பிரயாணம் செய்தார்கள்.

கொடியும், செடியும் நிறைந்த மலையில் மெள்ள ஏறித் தகுந்த இடத்தைத் தேடும் போது ஒரு செங்குத்தான பகுதியை அடைந்தார்கள். அதன் விளிம்பிலிருந்து எட்டிப் பார்க்கும்போது கீழே கிடுகிடு பாதாளத்தில் ஒரு குகை தெரிந்தது. அந்தக் குகைக்குப் போவதற்கு எவ்வித வழியுமில்லை. [ஏனெனில் குகைக்கு அடுத்தாற் போல் கீழேயும் ஒரு செங்குத்தான சரிவு இருந்தது. மலைக்கு நடுவில் ஒரு அந்தரத்தில் இருப்பதுபோல் அந்தக் குகை இருந்தது.

இதைப் பார்த்த தோழப்பர் என்பார், "பெரியீர்காள். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆழ்வாரையும் ஆபரணப் பெட்டகத்தையும் ஒரு நீண்ட சங்கிலியில் கட்டி மேலே இருந்து குகையில் இறக்கிவிட்டால், ஆழ்வார் எந்தவித பயமுமின்றி அங்கே பத்திரமாக எழுந்தருளி யிருப்பார். கள்வர்கள் எவரும் இந்தக் குகையை அணுகி விட முடியாது. பிறகு நல்ல காலம் பிறக்கும் காலத்தில் நாம் ஆழ்வாரை எடுத்துக்கொள்ள முயலுவோம்" என்று கூறினா.

எல்லாரும் ஆமோதிக்கவே, உடனே ஒரு நீண்ட சங்கிலித்தொடர் ஒன்றை அவர்கள் சித்தப்படுத்தினார்கள். ஆபரணப் பெட்டகத்துள்ளே ஆழ்வார் விக்கிரகத்தை எழுந்தருள வைத்து, பிறகு பெட்டகத்தை பத்திரப்படுத்தி, அதை அந்த சங்கிலி நுனியில் இறுகக் கட்டினார்கள். பிறகு.

அதை அந்தச் செங்குத்தான சரிவில், கிணற்றில் கயிறு கட்டி இறக்குவது போல் மெள்ள இறக்கி விட்டார்கள்.

அந்தப் பாதாளச்சரிவில் ஆழ்வாரது பெட்டகம் ஆடிக் கொண்டே இறங்கிற்று. அங்கங்கே சரிவில் நீட்டிக் கொண்டிருக்கும் பாறைகளில் அடிக்கடி அது இடித்துக் கொண்டது. அப்படி இடிக்கும் போதெல்லாம் அது பெரிதாக ஊஞ்சலாடியது.

முடிவில் அந்தப் பெட்டகம் ஒருவாறு குகையின் வாய்க்குள் மெள்ளச் சென்றது. அதன் இருட்டுக்குள் பையப்பைய மறைந்தது.

குகைப் பகுதியின் தரையைப் பெட்டகம் தட்டியதும் ஊர்வலத்தார் மீதிச் சங்கிலியை அப்படியே நழுவ விட்டார்கள்.

''விச்'' என்னும் சத்தத்துடன் அது குகைக்குள் போய் விழுந்தது.

பின்னர் பரிவாரங்கள் யாவரும் ஆழ்வாரைப் பிரிந்ததற்காகத் துக்கப்பட்டுக் கொண்டே மலையிலிருந்து கீழே இறங்கினார்கள்.

இதற்குள் கள்வர் கூட்டத்தார் மலை அடிவாரத்தை அடைந்து விட்டார்கள். எதிரே வந்த ஆழ்வாரின் ஊர்வலத்தாரை உடனே மறித்துக் கொண்டார்கள்.

ஊர்வலத்தாரிடம் மீந்திருந்த பொன் தகடாலான வட்டமணையும் வெள்ளி நிவர்த்திக் கோலையும், சிந்தையையும் (எண்ணெய்த் துருத்தி) அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். அதுமட்டுமின்றி ஊர்வலத்தாரது உடைகளையும் கவர்ந்து கொண்டார்கள்.

இம்மட்டாவது பெற்றுப் பிழைத்தோம் என்று கூறிக் கொண்டு ஊர்வலத்தார் தனியாகப் பிரிந்து அவரவர் ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இவ்விதம் ஆழ்வார் திருநகரி என்னும் தலத்திலிருந்து புறப்பட்ட நம்மாழ்வாரின் விக்கிரகம் மலையாள நாட்டு மலைக்குகை ஒன்றில் தனது அஞ்ஞாத வாசத்தை ஆரம்பித்தது.

அரங்க ஊர்வலம் புங்கனூரில் சிறிது காலம் தங்கியது. பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருநாராயணபுரத்தைப் போய்ச் சேர்ந்தது.

திரு நாராயணபுரம் என்னும் தலம் அப்போது ஒய்சள ராஜ்யத்திற்குட்பட்டு இருந்த வைணவத் தலம். அது மேல் நாடு என்றும் வழங்கப்பட்டு வந்தது.

இந்தக் கதை நிகழ்வதற்கு, இருநூறு ஆண்டுகளுக்கு முன் புகழ் பெற்ற இராமாநுஜர் சோழ அரசர் ஒருவரின் கொடுமை தாங்காது திருவரங்கத்திலிருந்து வந்து திருநாராயணபுரத்தில் குடியேறி வெகுகாலம் வாசம் செய்திருந்தார்.

இந்தக் காரணத்தினால் புகழும் புனிதமும் அடைந்திருந்தது அந்த வைணவத் தலம்.

இப்போது அந்த ஊரிலே திருவரங்கனே சரண்புக வேண்டிவந்தது.

இதனால் பாக்கியம் பெற்றவர்களாகக் கருதிய ஊர் வைணவர்கள் மிக ஆதரவுடன் அரங்க ஊர்வலத்தாரை வரவேற்று, செல்வப் பிள்ளையின் கோவிலில் அரங்கன் விக்கிரகத்தையும் எழுந்தருளச் செய்தார்கள்.

திருவரங்கத்தை விட்டுப் பிரிந்து வந்த சோகத்தை யாவரும் மறந்து போகும்படி அரங்கப் பெருமானுக்கு தின, வார, மாதாந்திர, வருட உற்சவங்களை எல்லாம் யாதொரு குறைவுமின்றிச் செய்து வந்தார்கள்.

அரங்கன் இவ்விதம் முதன் முறையாக ஒரு நிம்மதியான இடத்தில் நீண்ட காலம் தங்க ஆரம்பித்தார்.

தொடரும்

# ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமியின்

## திருவல்லிக்கேணி வைபவங்கள்

ஸ்ரீ வானமாமலைமடம் 28ஆவது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸ சடகோபராமானுஜ ஜீயர் ஸ்வாமி திக்விஜய யாத்திரை எழுந்தருள ஆரம்பித்ததிலிருந்தே அவர் எப்பொழுது திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளப் 'போகிறார் என்று ஆவலுடன் காத்திருந்தனர் திருவல்லிக்கேணி வாசிகள் அனைவரும். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இப்பட்டத்தை அலங்கரிப்பதற்குமுன் சுமார் 35 ஆண்டுகள் திருவல்லிக்கேணியில் வாழ்ந்து, ஸ்ரீபார்த்தசாரதி யெம்பெருமானுக்கு அத்யாபக கைங்கர்யமும் செய்து வந்தவர் நம் ஸ்வாமிகள். எனவே நம்மிடையே வாழ்ந்திருந்த ஒருவர் வைணவவுலகின் தலைசிறந்த பீடமான வானமாமலை ஜீயர் ஸ்வாமியாக எழுந்தருளுகிறார் என்றால் ஆவலும் பாரிப்பும் அதிகமாவதில் வியப்பென்ன?

20—4—82 அன்று திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமியை மங்களாசாஸனம் செய்வதற்கு எழுந்தருளுவதாக ஸ்ரீமுகம் வந்தது. 19—4—82 மாலை சென்னைக்கு எழுந்தருளினார் ஸ்ரீஜீயர் ஸ்வாமி. சென்னையின் நுழைவாயிலில் அரும்பாக்கத்தில், வரவேற்புக் கமிட்டியின் தலைவர் ஸ்ரீமான் நாதெள்ள ஆதிகேசவலு குப்தா அவர்களால் பூரணகும்பத்துடன் வரவேற்கப்பட்டார் ஸ்ரீஜீயர் ஸ்வாமி. அங்கிருந்து திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி யெம்பெருமானின் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருள. திருவல்லிக்கேணி வாசிகளின் சார்பில் அத்யாபககோஷ்டித் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ உ.வே. குவளை ராமானுஜா

சாரியார் ஸ்வாமி பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர். அன்றிரவு அங்கேயே தங்கியிருந்த ஸ்வாமி, திரளாக வந்திருந்த சிஷ்யர்களையும், அபிமானிகளையும் ஆசீர்வதித்தும், அளவளாவியும் மகிழ்ந்தார்.

மறுநாள் காலை சுமார் 8.30 மணிக்குத் தங்கப்பல்லக்கில் எழுந்தருளி தம்முடைய பரிவாரங்களுடனும் ஸ்தோத்ர பாட கோஷ்டியுடனும் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமாளின் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எழுந்தருளினார். உடனே கோயிலிலிருந்து ஸ்ரீஜீயர் ஸ்வாமியை அனுக்ரஹிக்க பல்லக்கில் ''ஸ்ரீசடகோபன்'' எழுந்தருள, கோயில் அர்ச்சகர்கள், மணியக்காரர், அத்யாபகர், கட்டியம் சேவிப்போர் முதலியோரும் கோயில் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளினர்.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி தண்டம் ஸமர்ப்பித்து நிற்க, பெரிய முறை அர்ச்சகர் ஸ்ரீ வேங்கடகிருஷ்ண பட்டாசாரியார் ஸ்ரீஜீயர் ஸ்வாமிக்கு ஸ்ரீபார்த்தஸாரதியெம்பெருமான் அனுப்பி வைத்த பஹுமானமான திருப்பரிவட்டம், மாலை இவைகளை ஸாதிக்க, ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி "அருளப்பாடு நம் வானமாமலை ஜீயர் ஸ்வாமி'' என்று கட்டியம் ஸாதித்தார். பிறகு பஞ்ச முத்திரையாக ஸ்ரீ சடகோபனும் ஸாதிக்கப் பெற்றது. பிறகு ஸ்ரீசடகோபன் ஸந்நிதிக்கே திரும்பியெழுந்தருளிவிட மீண்டும் ஸ்ரீஜீயர் ஸ்வாமி தம் தங்கப் பல்லக்கில் முன்போலவே எழுந்தருளி, திருவீதிப்ரதக்ஷிணமாக கோயிலுக்கு எழுந்தருளினார்.

வழியெங்குமுள்ள அன்பர்களும் சிஷ்யர்களும் தத்தம் திருமாளிகை வாசல்களில் ஸ்ரீ ஸ்வாமிக்கு பூர்ணகும்பமும் கற்பூர ஹாரத்தியும் ஸமர்ப்பித்து வரவேற்றது கண்கொள்ளாக் காட்சி.

சாரியார் ஸ்வாமி பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர். அன்றிரவு அங்கேயே தங்கியிருந்த ஸ்வாமி, திரளாக வந்திருந்த சிஷ்யர்களையும், அபிமானிகளையும் ஆசீர்வதித்தும், அளவளாவியும் மகிழ்ந்தார்.

மறுநாள் காலை சுமார் 8.30 மணிக்குத் தங்கப்பல்லக்கில் எழுந்தருளி தம்முடைய பரிவாரங்களுடனும் ஸ்தோத்ர பாட கோஷ்டியுடனும் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமாளின் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எழுந்தருளினார். உடனே கோயிலிலிருந்து ஸ்ரீஜீயர் ஸ்வாமியை அனுக்ரஹிக்க பல்லக்கில் ''ஸ்ரீசடகோபன்'' எழுந்தருள, கோயில் அர்ச்சகர்கள், மணியக்காரர், அத்யாபகர், கட்டியம் சேவிப்போர் முதலியோரும் கோவில் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளினர்.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி தண்டம் ஸமர்ப்பித்து நிற்க, பெரிய முறை அர்ச்சகர் ஸ்ரீ வெங்கடகிருஷ்ண பட்டாசாரியார் ஸ்ரீஜீயர் ஸ்வாமிக்கு ஸ்ரீபார்த்தஸாரதிப்பெருமாள் அனுப்பி வைத்த பகுமானமான திருப்பரிவட்டம், மாலை இவைகளை ஸாதிக்க, ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி "**அருளப்பாடு நம் வானமாமலை ஜீயர ஸ்வாமி**'' என்று கட்டியம் ஸாதித்தார். பிறகு பஞ்ச முத்திரையாக ஸ்ரீ சடகோபனும் ஸாதிக்கப் பெற்றது. பிறகு ஸ்ரீசடகோபன் ஸந்நிதிக்கே திரும்பியெழுந்தருளிவிட மீண்டும் ஸ்ரீஜீயர் ஸ்வாமி தம் தங்கப் பல்லக்கில் முன்போலவே எழுந்தருளி, திருவீதிப்ரதக்ஷிணமாக கோயிலுக்கு எழுந்தருளினார்.

வழியெங்குமுள்ள அன்பர்களும் சிஷ்யர்களும் தத்தமது திருமாளிகை வாசல்களில் ஸ்ரீ ஸ்வாமிக்கு பூர்ணகும்பமும் கற்பூர ஹாரத்தியும் ஸமர்ப்பித்து வரவேற்றது கண்கொள்ளாக் காட்சி.

# ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி

## ஸ்ரீ காஞ்சி திவ்யதேச யாத்திரை

தென்னாசார்ய ஸம்ப்ரதாய ப்ரதான ஜீயர் ஸ்வாமியான ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி திவ்ய தேச யாத்திரையாக எழுந்தருளி இருப்பதனை வாசகர்கள் அனைவரும் அறிவர்.

அந்த க்ரமத்தில் ஸ்ரீஜீயர் ஸ்வாமி கடந்த 16. 4. 82 வெள்ளிக்கிழமை இரவு பெருமாள் கோயில் எழுந்தருளினார் பற்பல சிஷ்யர்களும் அபிமானிகளும் உடன் வந்தனர்.

மறுநாள் 17—4—82 சனிக்கிழமை ஸ்ரீகாஞ்சி தேவப் பெருமாளையும் பெருந்தேவித் தாயாரையும் மங்களா சாஸனம் செய்தருள எழுந்தருளும்படி மேற்படி ஸன்னிதி மணியகாரர்கள் மூலமாய் தேவப் பெருமாள் நியமிக்க ஸ்வாமியும் பரம சந்தோஷத்துடன் அன்று காலை 8-00மணி அளவில் தன் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு காஞ்சி தேவப்பெருமாள ஸன்னதி வீதியில் உள்ள பதினாறு கால மண்டபத்திற்கு எழுந்தருளினார். அதே சமயம் தேவப் பெருமாளும் பெருந்தேவியாரும் ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமியை குளிரக் கடாக்ஷிக்க தமது திவ்ய திருவாராதனங்களை முடித்துக்கொண்டு மேற்படி மங்களா சாஸனத்திற்காக விசேஷ திருவாபரணங்களையும் புஷ்பம் மாலைகளையும் ஸமர்ப்பித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

காலை 8-30 மணி அளவில் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜீயர் ஸ்வாமிக்கு ஸ்ரீகாஞ்சி பஹுராவித்வான் பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி ஸ்வாகத பத்திரிகை வாசித்து உபன்யஸித்தார். சரியாக காலை 8-45 மணிக்கு காஞ்சி தேவாதராஜன் தன் "ஸ்ரீசட கோபன்" பல்லக்கில் ஸன்னதி குடை சாமராதிகள் புடை

சூழ ஸன்னதி எக்ஸிக்யூடிவ்டிரஸ்டி, கௌரவ தர்மகர்த்தா, அர்ச்சகர்கள், பரிச்சாரகர்கள், மணியக்காரர்கள், வேத திவ்ய பிரபந்த அத்யாபகர்கள், கட்டியம் ஸேவிப்போர் போன்ற பலர் எழுந்தருள திருமலையிலிருந்து ஸன்னதி வீதியில் உள்ள 16 கால் மண்டபத்திற்கு அனுப்பி வைத்தனன். ஆங்கே ஸ்ரீஜீயர் ஸ்வாமிக்கு மாலைமரியாதைகள் கட்டியத்துடனும், பஞ்ச முத்திரையாக ஸ்ரீசடகோபனும் ஸாதிக்கப் பெற்றது. பின்னர் நம் ஜீயர் ஸ்வாமி தமக்கே உரித்தான கம்பீரத்துடன் ஸ்வாமியின் திருப்பவளத்திலிருந்து அருளிச் செயல் அனுஸந்தானத்துடனும் உபயகலைவாருடைய கோஷ்டிகள் புடைசூழ மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளினார். கோபுரவாயிலில் ஸ்வாமிக்கு பூர்ண கும்ப மரியாதையுடன் ஸ்வாகதம் அளிக்கப்பட்டது. பின்னர் ஸ்வாமியுடன் சென்றவர்கள் ஸ்வாமியின் பல்வேறு விருதுகளை கோஷிக்க ஸ்வாமி தனது 82-வது திருநக்ஷத்திர தளர்வையும் மீறி அடிமேல் அடியெடுத்து கோபுர மண்டப ப்ராகாராதிகளை தம் திருக்கண்களால் பருகிக் கொண்டு மெள்ள எழுந்தருளி பெருந்தேவித் தாயார் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினார். ஆங்கே ஸ்வாமி தாயாருக்கு திருப்பரிவட்டம் சமர்ப்பிக்க ஸ்ரீ உவே ஸ்ரீனிவாஸபட்டர் பெருந்தேவித் தாயாரை ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிக்கு நன்கு ஸேவை செய்து வைக்க ஸ்வாமியும் பரிபூரணமாய் மங்களாசாஸனம் செய்தருளினார். ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிக்கு தாயார் ஸன்னதியில் தாயார் சூடிக் களைந்த மாலை பஞ்ச முத்திரை ஸ்ரீசடகோபனுடன் பஹுமானம் ஆயிற்று. பின்னர் திருமலையின் கீழே எழுந்தருளியுள்ள ஸ்ரீ நரஸிம்ஹப் பெருமான் ஸன்னதி மங்களாசாஸனமும் அங்கே பஹுமானங்களும் நடைபெற்றன. பின்னர் ஸ்வாமி திருமலைக்கு எழுந்தருளி தேவப் பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளினார். ஸ்ரீஉவே வரதராஜபட்டரும் ஸ்ரீஉவே சம்பத்குமார பட்டரும் தேவப் பெருமாளை நன்கு ஸேவை செய்து வைத்தனர். நம் ஜீயர் ஸ்வாமிக்கு ஸ்வாமி ஓர் உயர்ந்த பட்டாடையை பெருமாளுக்கு சமர்ப்பிக்க தேவப்பெருமாளும் தான் உடுத்துக்களைந்த உயர்ந்த பட்டாடையை போர்வையாகவும், ஒரு திருப்பரிவட்டத்தினையும் பஹுமானமாக அளித்தனன். ஸ்வாமிக்கு பஞ்சமுத்திரை ஸ்ரீசடகோபன் ஸாதிக்கும் கிரமத்தில் மிக உயர்ந்த மடாதிபதிகளுக்கு மட்டுமே உரித்தான விசேஷ மரியாதை நடைபெற்றது.

ஸ்வாமி தன் திருக்கரத்தினால் அன்றைய காலத்தில் திருக்கச்சி நம்பிகள் செய்துபோந்த திருவாலவட்டம் ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தை செய்தார். பின்னர் ப்ரதக்ஷிணத்தில் ஸந்நிதி வேதபாராயண அத்யாபகர்கள் ஸ்ரீஜீயர் ஸ்வாமியை தெண்டன் சமர்ப்பிக்க ஸ்வாமி அவர்களுக்கும் மற்றும் ஸந்நிதியில் உள்ள அனைத்து கைங்கர்ய பரர்களுக்கும் விசேஷ சம்பாவனைகளை தம் திருக்கரத்தால் கடாக்ஷித்து அருளினார். பின்னர் ஸ்வாமி ஆழ்வார் ப்ரதக்ஷிணமாக நம்மாழ்வார் மதுரகவிகள் நாதமுனிகள் மணவாள மாமுனிகள், உடையவர், வேதாந்ததேசிகர் ஸந்நிதிகளுக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்து பஹுமானங்கள் பெற்ற பின்னர் வாகனமண்டபத்திலிருந்து ஸந்நிதிபரிவாரங்கள் புடைசூழ வெளியே தம்மடத்திற்கு எழுந்தருளினார். வழியில் ஸந்நிதி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீநம்பிள்ளை ஸந்நிதிக்கும் எழுந்தருளி மங்களாசாஸனம் ஆயிற்று ஆங்கே ஸ்ரீஉ.வே காஞ்சி PBAஸ்வாமி ஜீயர் ஸ்வாமியை பூர்ணகும்பமரியாதைகளுடன் வரவேற்று பஹுமானித்தார். பின்னர் 11-00 மணிக்கு ஸ்வாமி மடத்திற்குள் எழுந்தருளி ஆங்கே அரங்க நகரப்பனுக்கு திருவாராதனமும் திருப்பாவை ஸேவை சாற்றுமறை தீர்த்தகோஷ்டியும் ததீயாராதனமும் நடைபெற்றன.

பின்னர்மாலை 4மணிக்கு ஸ்ரீஜீயர் ஸ்வாமி யதோக்தகாரி அஷ்டபுஜம் வேளுக்கை ஆளரி, திருத்தண்கா தீபப்ப்ரகாசர் தேசிகா ஸந்நிதிகளுக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினார். ஆங்கேயும் அனைத்து ஸந்நிதிகளிலும் விசேஷ மரியாதைகள் நடைபெற்றன.

இரவு 9-00 மணிக்கு ஜீயர் ஸ்வாமி தங்கப்பல்லக்கில் தேவப் பெருமாள் ஸந்நிதி மாடவீதியில் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளினார். மாடவீதிகளில் உள்ள அனைத்து திருமாளிகைகளிலும் ஸ்வாமிக்கு கற்பூர ஹாரத்தி சமர்ப்பிக்க ஸ்வாமியும் அனைவர்க்கும் பலமந்திராக்ஷதையினை அருளினார். கீழண்டை மாடவீதியில் வேத வேதாந்த வைஜயந்தி பாடசாலை வாயிலில் ஸ்ரீஉ.வே PBA ஸ்வாமி தன் தள்ளாத வயதிலும் தன் திருக் கரத்தினால் ஸ்ரீமத் ஜீயர்ஸ்வாமிக்கு மங்கள ஹாரத்தி ஸமர்ப்பித்தமையும் ஸ்வாமியின் விருதுகளை ஸேவித்தமையும் கண்டு அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். ஆங்கே ஜீயர்

ஸ்வாமிக்கும் P B A ஸ்வாமிக்கும் சுமார் 20 நிமிடம் ஸம்பாஷணை நடைபெற்றது. அவைகளில் சிலவற்றை கீழே தருகின்றோம்.

**ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி :** என்ன இது! இது நியாயமா! இங்கே தேவரீர் எழுந்தருள வேண்டுமா! அடியேன் பல்லக்கின் மீது மேலே அமர்ந்திருக்க இப்படி ஸ்வாமி கீழே எழுந்தருளி யிருப்பதும் தேவரீர் அடியேனுக்கு கற்பூர ஹாரத்தி ஸமர்ப் பிப்பதும் கூடுமோ?

**PBA ஸ்வாமி:** அடியேன் இதற்காகவேயன்றோ இத்தனை நாளாக காத்துள்ளேன், பகவான் ஏன் எனக்கு இன்னமும் ஆயுள் வைத்துள்ளான் என்பதனை இப்போது தேவரீரை வரவேற்பதற்காகவும் தேவரீரை ஸேவிப்பதற்காகவும் இந்த மாபெரும் பட்டிணப்பிரவேச மஹோத்ஸவத்தில் கலந்து கொள்வதற்காகவும்தான் என்பதனை உணர்ந்தேன்.

**ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி :** அடியேன் காஞ்சிக்கு வந்தது தேவப் பெருமானை ஸேவிக்க மட்டுமல்ல. தேவப் பெருமானை ஸேவிப்பது இரண்டாம் பட்சமே. தேவரீரை ஸேவிக்கவே வந்தேன்.

**P B A ஸ்வாமி :** இது தான் பாடசாலை. அடியேன் இங்கு தான் பல ஸம்வத்ஸரங்களாக வாசம் செய்கிறேன்.

**ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி :** அடியேனுக்கு நன்கு தெரியும். முதன் முதலில் அடியேன் இந்த பாடசாலையில் தான் பரீட்சை தந்தேன். அன்று இந்த பாட சாலையில் பரீட்சை தந்து தேவரீரிடம் இருந்து சம்பாவனை பெற்றதன் காரணத் தினால்தான் இன்று இந்த பல்லக்கின் மீது அமர்ந்திரு கின்றேன். இது தேவரீர் மறந்திருந்தாலும் அடியேன் மறக்கவில்லை. மேலும் ஒரு விஷயம். ஒரு ஸம்வத்ஸரம் தேவப்பெருமான் 8வது உத்ஸவத்திற்கு அடியேன் விடை கொண்டு இருந்தேன். அப்போது உத்தரீயமாக ஒரு பட்டாடை அணிந்து கொண்டிருந்தேன். அன்று தேவரீர் அதனைப் பார்த்து "தேவரீர் உத்தமாச்ரமியாகி விட்டால் இப்பட்டாடைகளை என் செய்யும்" என்று வினவினீர். அப்போது அடியேனுக்கு இந்த

ஸ்தானத்தை அடையப் போகின்றேன் எனத் தெரியாது. தேவரீரே ஞான திருஷ்டியால் அப்போதே ஸாதித்தது போதும். அது ஞாபகம் இருக்கின்றதா?

**P B A ஸ்வாமி :** நன்றாக ஞாபகம் இருக்கின்றது. ஆனால் அது 8 வது உத்ஸவம் அல்ல. 9 வது உத்ஸவம் என ஞாபகம். சரி விளம்பமாகிறது. ஜய விஜயீ பவ!

**ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி :** தேவரீர் சதாயுப் புருஷ: என 100 ஆயுசு எழுந்தருளியிருந்து தேவப் பெருமாளுக்கு கைங்கர்யம் செய்யவேணும்.

**P B A ஸ்வாமி :** நூறு ஆயுசா! அசக்தி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றதே! இது நாள் வரை இருந்ததே தேவரீரை ஸேவிக்கத்தான்.

**ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி :** அடியேன் நூறு ஆயுசு எனக் குறிப்பிட்டது இன்று முதல் வெள்ளைத்தை அடைந்து இன்னமும் ஒரு நூற்றாண்டு எழுந்தருளியிருக்கவேண்டும் என்பதே.


மேற்படி சம்பாஷணையைக் கேட்ட அனைவரும் அப்படியே விக்கித்து விட்டனர்.

பின்னர் ஸ்வாமி பல்லக்கில் எழுந்தருளி மடத்தினை அடைந்து அரங்க நகரப்பனுக்கு டோலோத்ஸவமாயிற்று. 18-4-82 அன்று மீண்டும் தேவப்பெருமாளை கண்ணாடி அறையில் மங்களாசாஸனம் செய்து பெருந்தேவித் தாயாரையும் மங்களாசாஸனம் செய்தார். பின்னர் கூரம் திருப்புட்குழி மற்றும் காஞ்சியில் உள்ள ஏனைய திவ்ய தேசங்களையும் மங்களாசாஸனம் செய்த பின்னர் காஞ்சி மண்டல திவ்ய தேச யாத்திரையை பூர்த்தி செய்து சென்னைக்கு எழுந்தருளினார்.


—P. B. ராஜஹம்ஸம்.



தங்கப் பல்லக்கில் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி



திருவல்லிக்கேணி
புகைப்படங்கள்



வபவங்களில் சிலகாட்சிகள்

: ''இதாசாரியன்''



ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் P. B. A. ஸ்வாமி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜீயர் ஸ்வாமிக்கு வரவேற்புரையளிக்கும் காட்சிகள்

புகைப்படம் உதவி : ஸ்ரீ பாலாஜி ஸ்டுடியோ, காஞ்சீபுரம்

திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி தேவஸ்தான

# வேத அத்யாபக கோஷ்டி

மேற்படி கோஷ்டியின் 760 வது ஆண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப் போவதாக கீதாசார்யனில் அறிவித்திருந்தோம். அதன்படியே மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ் வைபவத்தை நேரில் காணாதார் தெரிந்து கொள்ள இதை எழுதுகிறோம்.

விழாவை முன்னிட்டு நான்கு மாட வீதிகளும் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. ப்ரமோத்ஸவத்திற்கு வேதம்வல்லார்களும், இன்தமிழ் மறைவல்லார்களும், பற்பல திவ்ய தேசங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டனர். ஸ்வாமிகள் அனைவருக்கும் பத்து நாட்களும் இருவேளைகளும் ததியாராதனை நடத்தப்பட்டது. திருவீதிப் புறப்பாட்டில் இருவேளையும் சுமார் 100 ஸ்வாமிகளுக்கு உபசாரமாக சாத்துப்படி. கழுத்தில் மல்லிஹாரங்கள் ஸமர்ப்பித்து கண்கொள்ளாக்காட்சியாக அமைந்தது. பிரதி தினமும் ஸன்னதியில் உபந்யாசங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஸ்ரீ உ. வே. வித்வான்கள் T A வரதாச்சாரியார், கோமடம் T E ஸம்பத் குமாராச்சாரியார், பின்பேலோகம் விதலசயனத்துறைவார், புத்தூர் S கிருஷ்ணசாமி ஐயங்கார், ஆஸூரி நரஸிம்மாச்சாரியார், சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாச்சாரியார், வேளுக்குடி வரதாச்சாரியார் வானமாமலை சடகோபாச்சாரியார், குமாரவாடி ராமானுஜாசாரியார், ஆகியோர் உபந்யஸித்தனர். இதன் சிகரமாக கடைசி நாளன்று ஸ்ரீ உ வே மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி தமது 92 வது நக்ஷத்திர அசதியையும் பொருட்படுத்தாமல் காஞ்சிபுரத்திலிருந்து திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளி உபந்யஸித்தது கோஷ்டியின் பெருமையை மேலும் உயர்த்தியது.

கோஷ்டியில் அன்வயித்த ஸ்வாமிகளுக்கும் கோயில் கைங்கர்யபரர்களுக்கும் வேஷ்டிகள் வழங்கிய சுந்தரம் சாரிடீஸ், ஸ்ரீ K. R ஸ்ரீனிவாஸாசாரியார், நல்லி குப்புஸ்வாமி செட்டியார். கேசவன், கோடா ஸ்ரீனிவாசய்யா சாரிடீஸ். ஸ்ரீ C. K. நரஸிம்மாசாரியார் ஆகியோருக்கும்.

ததியாராதனைத்திற்குப் பொருளுதவி செய்த ஸ்ரீ அ. க. ராகவாசாரியார் (நாக்பூர்). P. B. அனந்தாசாரியார் (அட்வகேட்) N. C. ராகவாசாரியார் (அட்வகேட்). T. R. ஸ்ரீனிவாச ஐயங்கார் (அட்வகேட்), S. ரங்கஸ்வாமி ஐயங்கார், G. ராமநாதன், A. V. கன்னய்ய நாயுடு S. கோவிந்தபிள்ளை, ஸ்ரீரங்கம்மாள், பப்பிச்செட்டி ராகவ செட்டி சாரிடீஸ், H. சிவராமன், C. K. நரஸிம்மாசாரியார், ஸ்ரீனிவாஸன், M. A. வெங்கடகிருஷ்ணன் ஆகியோருக்கும்.

பத்துநாட்களும் ததியாரதனம் செய்வதற்கு இலவசமாக இடமளித்த ஸ்ரீ உ. வே. அத்தங்கிஸ்வாமிக்கும்.

இவ்விழாவினைச் சிறப்பாக நடத்துவதற்கு மிகச்சிறந்த முறையில் ஒத்துழைப்பளித்த இந்து அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரிகளுக்கும்,

மற்றும் இவ்விழாவினை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முழுஒத்துழைப்பு அளித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

கோஷ்டியின் நினைவு மலர் மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடப்போவதால் முன்னதாகவே 20 ரூ செலுத்தி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். செலுத்த வேண்டிய விலாசம், 12, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

**C பார்த்தஸாரதி**
கௌரவ காரியதரிசி

# ஸுதர்சனர் பதில்

பாபு, சென்னை-1

**66. ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம், ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி'' என்று நாம் அநுஸந்தித்துக் கொண்டிருக்கும்போது மற்றதேவதைகளைத் தொழக்கூடாது என்ற நிர்ப்பந்தம் ஏன்? எந்த தேவதையைத் தொழுதாலும் அது கேசவனைத் தானே அடையப் போகிறது?**

எந்த தெய்வத்தை நமஸ்கரித்தாலும் அது அந்த தெய்வத்திற்கு அந்தர்யாமியான கேசவனை அடையும் என்று இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. அந்தந்த தெய்வங்களின் பக்தர்கள் அந்தந்த தெய்வங்களுக்குச் செய்யும் நமஸ்காரமும், சாஸ்த்ரவிதியினால் ஜ்ஞாநிகளும் கர்மங்

---

**ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ணசாமி ஐயங்கார்**
**ஸுதர்சனம் ஆசிரியர்**

---

களை அநுஷ்டிக்கும் போது 'இந்த்ராய நம:' முதலான வாக்கியங்களில் மற்ற தெய்வங்களுக்குச் செய்யும் நமஸ்காரமும் அந்தர்யாமியான நாராயணனையே அடையும் என்னும் கருத்துடையது இந்த ச்லோகம். சாஸ்திர விதியினால் மற்ற தெய்வங்களுக்கு இந்த எண்ணத்துடன் செய்யும் நமஸ்காரத்தை யாரும் தடை செய்யவில்லை. வேத சாஸ்த்ரங்களுக்கு முரணாக, தாமஸமான ஆகமங்களையும் புராணங்களையும் அடிப்படையாகக் கொண்டு, மற்ற தெய்வங்களுக்கு ப்ராதான்யமும், கேசவனுக்கு அப்ராதான்யமும் அளித்து, கட்டப் பட்டிருக்கும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடுவதையே சாஸ்த்ரங்களும், ஆழ்வார்களும் ஆசார்யர்களும் தடை செய்கின்றனர்.

கா. தி. அண்ணாமலை, வில்லிவாக்கம்

**67 விசுவாமித்திரருடன் இராம இலக்குவர் மிதிலை நகர இராச வீதியில் செல்கின்றனர் உளம் விரும்பி உப்பரிகை**

மேலிருந்த சீதையும் வீதியில் நடந்து செல்லும் இராமரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். இதனை கம்பர், 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.' என்று கூறியுள்ளார்.

இராமனை 'அண்ணல்' என்று சிறப்பித்த கம்பர் சீதையை யாதானுமோர் அடைமொழியால் சிறப்பிக்காமல் வெறுமனே 'அவளும்' நோக்கினாள்! என்றது ஏன்? 'அணங்கும் நோக்கினாள், என்பது போல ஏன சிறப்பிக்கவில்லை?

'எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி' என்று இப்பாடல் தொடங்குகிறது. 'எவராலும் நினைக்கமுடியாத பெருமையை உடையவள்' என்று சீதையை வருணித்துக் கொண்டே கம்பன் இப்பாடலைத் தொடங்குகிறான். 'இனையள்' என்னும் பதத்தால் இதற்கு முந்திய இரு பாடல்களில் தான் சீதைக்கு வருணித்த பெருமைகளையும் சுட்டிக்காட்டுகிறான். ஈற்றடியில் உள்ள 'அவளும்' என்னும் பதம் இப்பெருமைகள் அனைத்தையும் காட்டுகிறதாகையாலே அணங்கு என்னும் பதத்தைக் காட்டிலும் சிறப்புற்றது.

68. பொழுது விடிந்தால் இராமனுக்கு முடிசூட்டுவிழா நடக்கப்போகிறதென்று முன் நாளே தயரதன் முடிவு செய்து விட்டான். இது ஊர் அறிந்த செய்தி.

முடிசூட்டு விழா நடைபெறும் காலை வேளையில் இராமனைப் பெற்றதாய் கோசலை 'முடிசூட்டு விழா' நடைபெறும இராஜசபைக்குப் போகாமல மகன இராமன முடிசூட்டிக் கொண்டு தன் மாளிகைக்கு வருவான் எனக் காத்திருந்ததாக, 'மௌலி சூடினன் வரும' என்று கமபர் கூறியுளளது ஏன்?

''அஸூர்யம் பச்யா ராஜதாரா ''(அரசரின் மனைவியரான அந்தப்புரஸ்த்ரீகள் ஸூர்யனையே காணமாட்டார்

கள்) என்கிற பண்டைக்கால நடைமுறையின்படி, அந்தப்புரத்தை விட்டு வெளியிலே வாராத ராஜபத்னிகள் ஊரே கூடியிருக்கும் முடிசூட்டுவிழாவுக்கு எப்படி வருவார்கள்?

R, பார்த்தசாரதி, சென்னை-80

**69. தினமணிக்கதிரில் மணிவண்ணன் பதிலில் திருக்குறுங்குடித்தலம் அரியும் சிவனும் ஒன்று' என்று நிரூபிப்பதாக திரு. நா. பார்த்தசாரதி கூறுகிறார், இது சரியா?**

இதுபற்றி ''திருக்குறுங்குடி கோவிலில் சிவனுக்குப் 'பக்கம் நின்றார்' என்று திருமங்கையாழ்வாராலேயே பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் பக்கத்தில் மற்றொருவர் நிற்பதால் இருவரும் ஒன்று என்று ஆகிவிடாது. மேலும், பெருமான் புறப்பாடுகளில் பக்கம் நின்றார் ஸந்நிக்கு முன் வரும் போது 'பக்கம் நின்றாற்கு ஒன்றும் குறைவில்லையா ?' என்று அர்ச்சகர் மூலம் கேட்பதும், சிவன் கோவில் குருக்கள் முன்வந்து 'ஒன்றும் குறைவில்லை' என்று விண்ணப்பிப்பதும் இக்கோவிலில் இன்றும் நடைபெறுகிறது. இவற்றிலிருந்து இக்கோவிலில் சிவன் பரிவாரதேவதையே என விளங்குகிறது. இதை தினமணிக்கதிரில் வெளியிட்டுப் பொதுமக்களுக்கு உண்மையை உணர்த்தவேண்டும்'' என்று தினமணிக் கதிர் காரியாலயத்திற்குக் கடிதம் எழுதினோம். கதிர் நிர்வாகிகளுக்கு உண்மையை வெளியிடும் நேர்மையில்லை. திரு. நா. பார்த்தசாரதி கதிர் ஆசிரியராயில்லை என்று தெரிந்தவுடன் அவருக்குக் கடிதத்தின் நகலை அனுப்பி, அவர் கருத்தில் மாற்றம் விளைந்ததா என்று கேட்டிருந்தோம். நாம் 12—4—82 அன்று சென்னை சென்றிருந்தபோது திரு நா. பார்த்தசாரதி போன் மூலம் நம்மோடு தொடர்பு கொண்டு 'தங்கள் விளக்கத்தைக் கண்டபின் என்னுடைய

கருத்து மாறிவிட்டது' என்று கூறினார். ஆகையால் இது பற்றி இனி சர்ச்சைக்கு இடம் இல்லை.

**S. வேங்கடம், சமயபுரம்.**

**70. 4-2-82 குமுதத்தில் "ராமானுஜர் மற்ற வருணத்தவர்களுக்கும் பூணூலை மாட்டி, அவர்களை அந்தணர்களாக்க முயன்று தோல்வியடைந்தார்" என்று திராவிடக் கழகத்தைச் சேர்ந்த கி.வீரமணி எழுதியிருக்கிறார் 'வீரமணியின் வாதத்தில்பகுத்தறிவு இல்லை' என்னும் தலைப்பில் 1-4-82 துக்ளக்கில் எழுதிய கட்டுரையில் வி பி.சிந்தன் என்பவர் 'ராமானுஜர் புலையருக்குப் பூணூல் போட்டுச்சாதியை ஒழிக்க முயன்றார்' என்று எழுதியிருக்கிறார் இவற்றில் உண்மை ஏதேனும் இருக்கிறதா?**

இவற்றில் உண்மை ஒரு சிறிதும் இல்லை. ஸ்ரீராமானுஜரைப் பற்றிய எந்த வரலாறு நூலிலும் இப்படி ஒரு செய்தி கிடையாது. ஸ்ரீராமானுஜர் தம் நூல்களில் அவரவர் தத்தம் வர்ணாச்ரமங்களுக்குரிய தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பலவிடங்களில் உபதேசித்திருக்கிறார். இத்தகையவர் மனம்போனபடி அனைவருக்கும் பூணூலை மாட்டிவிட முயன்றார் என்று எழுதுவது பரிஹாஸிக்கத்தக்கது. விஷயம் அறியாத வீரமணியும், சிந்தனும் இப்படி எழுதினாலும், விஷயமறிந்தவர்கள் நிறைந்த குமுதமும் துக்ளக்கும் இந்தப் பெரும் பொய்யை வெளியிட்டது மிகவும் வருந்தத்தக்கது. பல வைஷ்ணவர்கள் இதை மறுத்து எழுதியிருப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். அக்கடிதங்களில் எதையும் வெளியிடாதது பத்திரிகை தர்மத்தையே மதிக்காத செயலாகும்.

★

# திருமலை அநந்தாழ்வான்

எம்பெருமானுர் ஒருசமயம் பகவத் விஷய காலக்ஷேபம் அருளிச் செய்து கொண்டிருந்த போது 'ஒழிவில் காலமெல்லாம்' என்ற திருவாய்மொழி வந்தவாறே ''சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து எம்பெருமானுக்கு புஷ்பகைங்கர்யம் செய்வார் ஆரேனுமுண்டோ?'' என்று வினவினுர். அக்காலங்களில் திருமலைக்குச் செல்வது மிகவும் கடினமான காரியம். எம்பெருமானுர் வினவியவுடன் அனந்தாழ்வான் எழுந்து, ''தேவரீர் நியமித்தால் அடியேன் செல்கிறேன்'' என்று விண்ணப்பித்தார். அதைக்கேட்டுவந்த எம்பெருமானுர் 'இவ்வளவு பெரிய கோஷ்டியில் நீர் ஒருவரே ஆண்பிள்ளை'' என்றுபுகழ்ந்தார். அது முதல அனந்தாழ்வானின் வழி வந்தவர்கள் அநந்தாண்பிள்ளை என்றழைக்கப்படுகின்றனர்.

எம்பெருமானுர் நியமனப்படி அனந்தாழ்வான் திருமலை சென்று ஒரு நந்தவனமேற்படுத்தி திருமலையப்பனுக்குப புஷ்ப கைங்கர்யம செய்து வந்தார. ஒரு சமயம அநந்தாழ்வானுடைய பெருமையை உலகுககு அறிவிக்க திருவேங்கடமுடையான், தாமும அலர்மேல் மங்கையுமாக, ஒரு அரச குமாரனுகவும் அரச கன்னியாகவும் நந்தவனத்தில புகுந்து பூக்களைப் பறித்து விளையாடிக் கொண்டிருந்தனர். நந்தவனத்தைக காவல காத்து நின்ற அனந்தாழ்வான் இவர்களைக கள்ளர்கள் என்று கருதித் துரத்த அவசரததில் பெருமான் அப்ரதக்ஷிணமாக ஓடிவிட பிராட்டி மட்டும பிடிபட்டார் அவளை ஒரு மரத்தில கட்டிப் போட்டு விட்டார ஆனுல் மறுநாள் காலை அர்ச்சகர்கள் மூலம் நடந்தவற்றைதயறிந்த அநந்தாழவானமனம் பதைத்து பிராட்டியிடம் சென்று க்ஷமிககுமாறு வேண்ட, பிராட்டி ''என்னை உமது மகளாகக கருதி, திருவேங்கடமுடையானுக்கு மணம் செய்து கொடும'' என்று நியமிக்க அவரும் அப்படியே செய்தார் இது பற்றி வாழி திருநாமத்தில் ''மலையில் வேங்கடவறகு மாமனுர் வாழியே'' என்று போற்றப் படுகிருர். இன்றும மாமனுர் மருமகனுககு திருத தேர் சம்பாவனை செயயும வகையில ஒவ்வொரு வருடமும அனந்தாழ்வான் திருமாளிகை வாசலில் திருத்தேரன்று திருமலையப்பனுக்குச் சமபாவனைகள் செயயப்படுகின்றன. புரட்டாசித் திருவிழா முடிந்த மறுநாள் திருமலையப்பன் அனந்தாழ்வான தோட்டத்திறகு எழுந்தருளி அப்ரதக்ஷிணமாக ஸன்னிதிககு எழுந்தருள்கிறா. இது பாக்சவாரி உத்ஸவம் எனபபடுகிறது.

ஒரு திருவாடிப் பூரத்தன்று திருநாடலங்கரித்த அனந்தாழ்வான் இன்றும் தோட்டத்தில் ஒரு மகிழமரமாக ஸேவை ஸாதிக்கிறார். ஒவ்வொரு வருடமும் திருமலையப்பன் அன்றையதினம் தோட்டத்திற்கு எழுந்தருளி மகிழமரத்திற்கு ஸ்ரீ சடகோபன் மரியாதை சாதிக்கிறார்.

திருமலையில் எம்பெருமானுருக்கு விக்ரஹப் பிரதிஷ்டை செய்வித்தவர் அனந்தாழ்வான். திருமலையில் எம்பெருமானுடைய திருவடி நிலைகள் அனந்தாழ்வான் என்றே அழைக்கப் படுகிறது.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த அனந்தாழ்வான் கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜர் கோயிலில் மதுரகவிகளுடன் கோயில் கொண்டுள்ளார். சித்திரையில் சித்திரை நாள் அவதரித்த மதுரகவிகள், அனந்தாழ்வான், இருவருக்கும் பத்துநாட்கள் இருவேளையும் உத்ஸவம் நடை பெறுகிறது. இவ் வருடம் சாற்றுமறை மிகவும் விசேஷமாக நடைபெற்றது காலை பெருமாள், மதுரகவிகள் அனந்தாழ்வான் சன்னதிக்கு எழுந்தருளி, அவர்களுடன் திருமஞ்சனம் கண்டருளி திருப்பாவை சாற்றுமறை நடைபெற்றது இரவு பெருமாளுக்கு எதிரில் மதுரகவிகளும் அனந்தாழ்வானும் ஒரே திருச்சியில் (கேடயத்தில்) எழுந்தருளி திருவீதிப்புறப்பாடு கண்டருளினர். இரவு சாற்று முறை முடிந்து மதுரகவிகளும் அனந்தாழ்வானும் கோவிந்தராஜனை மங்களாசாஸனம் செய்து ஸ்தோத்ரபாட கோஷ்டியுடன் சன்னிதி எழுந்தருளினர். இவ்வைபவத்திற்கு திருவேங்கடமுடையான் மதுரகவிகளுக்கும் அனந்தாழ்வானுக்கும் தமது சேஷவஸ்த்ரங்களை அனுப்பி பகுமானித்தார்.

மதுரகவிதாஸன்

திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசாரி,
மிராசுதார், மதுரகவி அனந்தாழ்வான் சன்னதி
ஆசார்ய புருஷர், தி தி தேவஸ்தானம்

# திருமகள்

வைஷ்ணவ நாயகன் — வைகுண்ட நாதன் — வரப்பிரசாதியான அந்த பகவானின் திரு மார்பில் உறைபவள் திருமகள். திரு என்றாலே அழகு, செல்வம், தெய்வீகம், மேன்மை, சிறப்பு, பாக்கியம் பொலிவு நல்வினை மாங்கல்யம் என்று அந்தனையும் லக்ஷ்மிகரமாக தொனிக்கிறது. திருமால் என்ற மேன்மையான பகவானுக்கு திருமகள் என்ற சிறப்பான மனைவி வாய்த்திருக்கிறாள். பாரதத்தின் பெண் தெய்வங்களுள் லக்ஷ்மியின் ஸ்தானம் உயர்ந்தது ஆகும். மனித ஜீவன் பல லக்ஷ்மிகளுடன் பிறப்பதாகவும் அந்த லக்ஷ்மிகள் அந்த ஜீவனின் கர்ம வினைகளுக்கேற்ப அந்த ஜீவனிடமிருந்து பறந்து செல்லமுடியும் அல்லது ஒட்டிக்கொள்ள முடியும் என்று அதர்வண வேதம் கூறுகிறது.

---

வசந்தா கோவிந்தன்

---

உலகையெல்லாம் அன்புடன் பார்ப்பதாலும், தேவிகளில் சிறந்தவள் ஆதலாலும் அவள் மகாலக்ஷ்மி எனப்பட்டாள். ஸ்வர்கத்தில் ஸ்வர்க லக்ஷ்மியாகவும் ஸர்வஸ்திரீகளிடத்தும் ப்ரேமை ரூபமாகவும், பாதாளத்தில் நாகலக்ஷ்மியாகவும், அரசரிடம் ராஜலக்ஷ்மியாகவும், வீட்டில் கிருஹ லக்ஷ்மியாகவும், ஸம்பத்தாகவும் ஸுரபி (சுரபி) என்னும் கோவாகவும் யக்ஞ பத்நியான தக்ஷிணையாகவும் இருக்கிறாள்.

சந்த்ர, சூர்ய மண்டலத்தின் சோபையாக விளங்குகிறாள். ஆபரணங்களிலும், பழங்களிலும், பயிர்களிலும், புதுவஸ்திரங்களிலும், மரக்கிளைகளிலும், துளிர்களிலும் புது மேகத்திலும், தாம்பூலத்திலும், தான்யங்களிலும், பசுவிடத்திலும், மங்களச்

சின்னங்களான குங்குமம், மஞ்சள், வாழை, மாவிலை, கோலம், தீபம் முதலிய பொருள்களிலும் அவள் வாசம் செய்கிறாள். சுத்தமான இடங்களில் நர்த்தனம் புரிகிறாள்

அவள் வசிக்கும் மங்கலப் பொருள்களை பக்தியுடன் நாம் உபயோகிக்க வேண்டும். மஞ்சளைத் தற்போது பெண்கள் பலர் தவிர்த்துவிட்டனர் என்றே சொல்லவேண்டும். நாகரீக முன்னேற்றமே காரணம். 'முன்னொரு காலத்தில், கன்னியாஸ்திரிகளில் இருந்து சுமங்கலிப் பெண்கள் வரை மஞ்சள் தேய்த்துக் குளித்தார்கள்' என்று சொல்லும்படி இப்போது முகப்பவுடரும், ஸ்னோவும் ஆட்சிப் புரிகின்றன பெண்களின் முகத்தில். ஆனால் சமையலிலாவது சேர்த்துக் கொள்கிறார்களே என்று பாராட்டத்தான் வேண்டும்

குங்குமம் பெண்களின் சௌபாக்யச் சின்னம். நெற்றியின் முன் வகிட்டில் லக்ஷ்மி உறைவதாகக் கூறுவர். நடு வகிட்டிலும் நெற்றியிலும் குங்குமம் இட்டுக்கொண்டால், கணவனோடு வாழும் பெண்கள் வேறொரு ஆண்மகனின் மனதில் ஆசையைத் தூண்டாதவாறு தடுக்க முடியும். குங்குமம் அணிந்துள்ள மங்கையரை எத்தனை வருடங்கள் பார்த்து மோகித்தாலும் அவளை அடைய முடியாது. அதனால் அவன் மனம் சலிப்படையும். ஆவலும் தணிந்துவிடும். மங்கையின் கற்பும் நிலைபெறும். ஒரு வீட்டின் மாடியில் மேலே மூலையில் இடி தாங்கியை வைத்து அவ் வீட்டை எப்படி, இடியால் உண்டாகும் ஆபத்திலிருந்து தடுக்க முடியுமோ அது போல் குங்குமத்தை நெற்றியில் இடுவதால் மற்ற ஆண்களின் மனோ சக்தியில் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். ஹிப்னடிசம், மெஸ்மெரிசம், ஏவுதல் போன்றவற்றிலிருந்தும் சுத்தமான குங்குமம் அணிந்தவர்கள் காப்பாற்றப் படுகிறார்கள். ஏனென்றால் லக்ஷ்மியல்லவா கெடுதல்களை சமாளிக்கும் சக்தியாக குங்குமத்தில் வாசம் செய்பவள்!

முன் காலத்தில் புருஷர்கள் திருமணக் காலத்தில் தங்களுக்கு வந்த மனைவியின் நெற்றியில் தங்கள் வீரத்தைக் காட்ட ரத்தத்திலகம் இடுவார்களாம். அது நாளடைவில் குங்குமத் திலகமாக மாறியது. இப்போது அதுவும் போய் 'சிருங்கார்' திலகமாக (சாந்து) மாறிவிட்டது. வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு அவர்கள் திரும்பிப் போகும்போது தாம்பூலத்துடன் குங்குமம் கொடுத்து வழியனுப்பும் முறை சிறந்த முறையாகும். லக்ஷ்மியை மதிப்பது போன்று ஆகும்

பெருமாளை மட்டும் விரும்பினுள் சூர்ப்பனகை. தாயாரை மட்டும் விரும்பினுன் ராவணன். எதனுல்? பக்தியாலா? அல்ல! இருவரின் நோக்கமும் போகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனுல் இருவரின் நிலையும் என்ன? அழிந்தார்கள்! அதுபோல் அல்லாமல் பகவானுன திருமண்ணையும்— ஸ்ரீ சூர்ணம் என்ற லக்ஷ்மியையும் சேர்த்தே அணிய வேணும். தரிக்க வேணும். தாயார் நெற்றியில்கூட ஸ்ரீ சூர்ண குறியுடன் அதன் கீழே திருமண் குறியும் உண்டு. கோவிலுக்குச் சென்று தரிசிப்பவர்கள் கண்டிருக்கலாம். தாயாரையும், பெருமாளையும் பிரிப்பது போன்று ஆகும் திருமண் இல்லாமல் ஸ்ரீ சூர்ணம் மட்டும் அணியும் முறை. ஆனுல் ஒரு சில வைஷ்ணவர்கள் சுத்தமாக நெற்றிக்கே தரித்துக் கொள்ளாமல் 'பாழ் நெற்றி' போல் அக்கடா என்று நெற்றியை விட்டுவைத்திருப்பதைப் பார்த்தால் ''எங்களுக்கு இருவரின் கடாக்ஷமுமே வேண்டாம் போங்கள்'' என்று சொல்வதுபோல் இருக்கிறது.

அதிகாலை வேளையில் 'பச்'சென்று சாணம் தெளித்து அதில் பளிச்சென்று அரிசி மாவினுல் வெண்மையாக கோலம் வரைந்தால் அங்கு லக்ஷ்மி தாண்டவமாடுகிருள். அதிலும் செம்மண் இட்டு (காவி கட்டுதல்) விட்டால் பகவானையும், தாயாரையும் நம் வீட்டு வாசலில் நிறுத்தி வைத்தாற்போல் அல்லவா தெரிகிறது?

புருஷனை வசப்படுத்தி துணைநின்று காரியத்தை செய்விக்கும் தகுதி பெண்களுக்கு உண்டு உதாரணமாக,

ஒரு அலுவலக நிர்வாகி மிகவும் முன்கோபி. அவரைக் கண்டாலே அலுவலக சிப்பந்திகளுக்கு சிம்ம சொப்பனம். அதில் ஒரு சிப்பந்திக்கு நிர்வாகியால் அவசர காரியம் ஒன்று ஆகவேணும். ஆனால் நேரே அவரைக் கண்டு பேச பயம். அதனால் தன் மனைவி மூலமாக விஷயத்தைச் நிர்வாகி மனைவியிடம் பேசி வரச் சொல்கிறான். அந்த நிர்வாகியின் மனைவியும் தன் கணவனிடம் இது விஷயம்பற்றி சொல்லி பிரச்சனையைத் தீர்த்துவைக்கிறாள். இந்த இடத்தில் நிர்வாகியின் மனைவியைப் போன்றவள் லக்ஷ்மி. அவள் கடாக்ஷம் இருந்துவிட்டால் நம் நிர்வாகியான பகவான் நம்மை தேடியே வந்து நம பிரச்சனைகளை தீர்த்து வைப்பான். லக்ஷ்மியின் அருள் இருக்கும் இடமே பகவானுக்கு பிடித்த இடம் அதனால் முதலில் தாயாரை உபாசிப்போம். தந்தையின் அருளைப் பெறுவோம் தாயாரின் 'ரெகமன்டேஷன்' நமக்கு மிகவும் முக்கியம்.

திருமகளின்—தாயாரின் தயவை முன்னிட்டு தந்தையை அடைய வேண்டும் என்பதே ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கையும் கூட!

அகனமர்ந்து செய்யாள் உறையும் மடியிலான்
தான் உளாள் தாமரையினுள்

—திருக்குறள்

# கண்ணன் கதைகள்

தீபம். நா. பார்த்தசாரதி

## 22. மதுராபுரிக்குப் பயணம்

கம்சனால் கோகுலத்துக்குத் தூதனுப்பப்பட்ட அக்ரூரர் அங்கு வந்து சேர்ந்தார். விரைவில் பலராமன், கண்ணன் முதலியவர்களை அழைத்துக் கொண்டு தன்னிடம் திரும்பி வர வேண்டுமென்று கம்சன் அவருக்கு ஆணையிட்டிருந்தான். தேரில் கோகுலத்தை நோக்கி வருகிற வழியெல்லாம் அவர் கண்ணனைப் பற்றிய சிந்தனைகளிலேயே ஆழ்ந்திருந்தார். பண்பும், அழகும், இளமையும், தெய்விக இயல்புகளும் பொருந்திய கண்ணனைக் காணப் போகிறோம் என்ற களிப்பு அவர் மனம் முழுவதும் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தது. ''ஐயோ பாவம்! கண்ணன் அப்பாவிப் பிள்ளையென்று நினைத்துக் கொண்டு இந்தக் கம்சன் என்னென்னவோ செய்து கொண்டு வருகிறான். ஈரேழு பதினான்கு புவனங்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லமை வாய்ந்த கண்ணனைச் சிறு குழந்தை என்றெண்ணிவரும் பேதமையை என்ன சொல்வது? தன் முடிவைத் தானே வலுவில் அழைத்து வரவேற்றுக் கொள்கிறவனைப் போலக் கண்ணனைக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறான். இதன் விளைவு என்ன ஆகுமென்பதை இப்போது அறிய முடியாது. பின்னால் தெரிந்து கொள்வான் இந்தக் கம்சன்'' என்று இப்படியெல்லாம் சிந்தனைகள் நிறைந்த மனத்தோடு தேரில் வந்து கொண்டிருந்தார் கம்சனால் அனுப்பப்பட்ட அக்ரூரர். அவருடைய தேர் பிருந்தாவனத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. யமுனை நதிக்கரையின் அழகிய சாலைகளில் பயணம் செய்யும்

போது மனத்திற்குத்தான் எத்தனை இன்பம் ஏற்படுகின்றது? அக்ரூருடைய தேர் கோகுலத்தை நெருங்கும் போது மாலை மயங்கும் நேரம். ஆயர்குலச் சிறுவர்கள் பசுக் கூட்டங்களை வீடுகளுக்குத் திருப்பி அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். கோகுலத்துத் தெருக்களில் ஆண்களும் பெண்களும் பலவகை இனிய பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த ஒலி காற்றில் மிதந்து வந்தது. இறைமை கனியும் அந்த ஊரையும் அதன் சுற்றுப்புறங்களையும் கையெடுத்துக் கும்பிட்டு வணங்க வேண்டும்போல அவர் மனதில் ஒரு சத்தியக் கிளர்ச்சி எழுந்தது. தேர்ச் சக்கரங்களைப் போலவே அவருடைய மனமும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கடல் போலப் பரந்து பெரிதாகத் தோன்றிய ஒரு மாளிகையின் வாயிலில் தேர் வந்து நின்றது. அங்கு கோகுலத்தாரோடு நந்தகோபர் முதலியவர்கள், கண்ணன், பலராமன் முதலிய இளைஞர்கள் எல்லோரும் கூட்டமாக வாயிற்புறம் வந்து சூழ்ந்து கொண்டனர். எல்லோரும் அக்ரூரரை வணங்கி வரவேற்றார்கள். பயபக்தியோடு கண்ணனுடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார் அக்ரூரர். மற்றப் பெரியோர்களையும் வணங்கினார். ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள் அக்ரூரருக்கு வரவேற்புகளும் உபசாரங்களும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அறுசுவையுணவும் நிறைந்த அற்புதமானதொரு பெருவிருந்து அளிக்கப் பட்டது.

விருந்து முடிந்தபின் அக்ரூரரோடு நந்தகோபர், கண்ணன், பலராமன்—எல்லோரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். நந்தகோபர் அக்ரூரரிடம் கம்சனைப் பற்றி விசாரித்தார். ''அக்ரூரரே! கம்சமகா மன்னர் நலமாக இருக்கிறாரா? தேவகியின் குழந்தைகளையெல்லாம் அப்போது கொன்று தீர்த்து ஆவலைத் தணித்துக் கொண்

டார். அதனால் அந்தப் பாவங்களெல்லாம் உங்கள் தேசத்தைப் பற்றி நீங்கள் எல்லளவோ தீமைகளையும் அனுபவித்தீர்கள். அதனால்கூட அச்சமில்லை எங்களுக்குத் துன்பம் செய்தாலும் கம்சன் நன்றாயிருக்கட்டும். மற்றவற்றை நாளைக்குப் பொழுது விடிந்ததும் பேசிக் கொள்வோம். நீங்கள் நெடுந்தூரம் பயணம் செய்து அலுப்படைந்து போய் வந்திருக்கிறீர்கள். உறங்கி ஓய்வு கொள்ளுங்கள்'' என்று சொல்லி அவருக்குத் தனிமையை அளித்து விட்டுச் சென்றனர். ஆனால் கண்ணன் மட்டும் அக்ரூருடைய படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான் அக்ரூரும் கண்ணனோடு பேசுவதற்கு அப்படி ஒரு தனிமையான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

''அக்ரூரரே! அங்குள்ள என் உறவினர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்களா? இன்னும் என் பெற்றோர்களைக் கம்சன் சிறையில்தான் அடைத்துத் துன்புறுத்துகிறானா? கம்சனுடைய தீமைகள் இன்னும்கூட ஒழிந்தபாடு இல்லையா? நீங்கள் இங்கு வருவதையறிந்து கம்சனுக்குத் தெரியாமல் இரகசியமாக என்னிடம் கூறும்படி என் பெற்றோர்கள் ஏதேனும் செய்தி அனுப்பினார்களா? எல்லாவற்றையும் எனக்கு விவரமாகச் சொல்லுங்கள். கம்சன் தங்களை இங்கு அனுப்பிய காரியம் என்னவென்று தெரிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். தயவு செய்து விவரங்களைக் கூறுங்கள்'' என்று அவரிடம் அருகில் நெருங்கி உட்கார்ந்து அன்போடு விசாரித்தான் கண்ணன். அவன் அப்படி ஒட்டுறவோடு தன்னை அண்டி விசாரித்ததே அக்ரூருக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது. என்னுடைய பேச்சைக் கேட்கவும், எவனுடைய பாதங்களைத் தீண்டவும், எவனை அருகில் வைத்துக் கொள்ளவும், உலகமெல்லாம் வழிபட்டுக் கொண்டிருக்கிறதோ அவன் தானாகவே அருகில் வந்து அமர்ந்தால் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? அக்ரூரர் 'கண்ணனுக்கு விவரமாக எல்லாவற்றையும் எடுத்துக் கூறத் தொடங்கினார்.

"கண்ணா! உலகத்துக்கெல்லாம் நன்மையைச் செய்வதற்காகப் பிறந்திருப்பவன் நீ! ஆனால் என்ன விந்தை! உனக்குத் தீமையைச் செய்வதற்கும் சிலர் பிறந்திருக்கிறார்கள். அது அவர்களுடைய போதாத காலம்! நடந்ததைச் சொல்கிறேன் கேள். ஒரு நாள் நாரத முனிவர் கம்சனைக் காண்பதற்கு வந்திருந்தார். அவர் உன்னுடைய பிறப்பின் நோக்கத்தையும், அதனால் எதிர் காலத்தில நடக்க இருக்கும் செயல்களையும் கம்சனுக்குக் கூறினார். அவற்றைக் கேட்டதுமே உன்னை உலகுக்கு அளித்த பெற்றோர் மேல் கம்சனுக்கு அளவற்ற சினம் உண்டாயிற்று. அவர்களை கொன்று விடலாமென்று கூடத் திட்டமிட்டான். பின் என்ன நினைத்தானோ; கொல்லாமல் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான். ஆனால் உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் துன்பம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மட்டும் இன்றும் அவன் கைவிடவே இல்லை, கம்சனும் அவனைச் சேர்ந்த தீயவர்களுமாகக் கூடி ஒரு 'தனுர் வேள்வி' செய்வதற்கு முயன்று வருகிறார்கள். அந்த 'தனுர் வேள்வி'க்கு உங்களையெல்லாம் அழைத்து வரச் சொல்லியே என்னை அவன் அனுப்பியிருக்கிறான். நீங்கள் எல்லோரும் அங்கு வருவீர்களானால் உங்களைப் பலவகையிலும் அவமானப்படுத்தித் துன்புறுத்த வேண்டுமென்பது தான் அவனுடைய நோக்கம். உங்களைத் துன்புறுத்துவதற்காகவே மல்லர்களையும் முரடர்களையும் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறான்".

அக்ரூரர் இவ்வாறு சொல்லிக் கொண்டு வரும் போதே கண்ணன் அவரைப் பார்த்து மெல்லச் சிரித்தான். அவர் மேலும் தொடர்ந்தார்:—"கண்ணா! நீ சிரிப்பதன் பொருள் எனக்கு விளங்குகிறது. இதைவிடப் பெரிய துன்பங்கள் வந்தாலும உன்னால் சமாளிக்க முடியும். இது உனக்கு பெரிதன்று என்பதை நான் அறிவேன். ஆனால் கம்சனுடைய உட்பகை இன்று அவனிடம் வளர்ந்து வரும் குற்றத்திற்காக தான் இங்கே வந்து உன்னிடம் இந்தச் செய்தியைத் தூது சொல்வதற்கு ஒப்புக் கொண்டேன்" என்றார்.

"மிகவும் நல்லது! நாங்கள் நாளைக் காலையிலேயே புறப்பட்டு வருவதற்கு ஆயத்தமாயிருக்கின்றோம். இப்போது நீங்கள் படுத்து உறங்குங்கள்" என்று அக்ரூரரிடம் சொல்லி விட்டுப்போனான் கண்ணன்.

(தொடரும்)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகளை உபதேசமாகப் பெறுதல். இவற்றின் உள்ளுறை பொருள்களையும் ஆசார்யனிடமிருந்து அறிந்து கொள்ளல் அவசியம், அறிந்து அவ்வர்த்தங்களின்படி ஸ்வரூபமறிந்து அதன்படி நமது மனோபாவத்தையும் வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளல் அவசியமானது. இம்மூன்று மந்த்ரங்களுள் த்வயத்தையே ஸதா அநுஸந்தித்து வந்துள்ளனர் நமது ஆசாரியர்கள். **த்வயமர்த்தாநுஸந்தாநேந ஸஹ யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ** என்று நம்பெருமாள் (உடையவருக்கு) நியமனம் பண்ணியதாக கத்யத்தில் காணலாம். மணவாளமாமுனிகளும்,

**மந்த்ரரத்ந நுஸந்தாந ஸந்ததஸ்புரிதாதரம்**
**ததர்த்த தத்வநித்யாந ஸந்நத்த புலகோத்கமம்**

(மந்த்ரரத்நமான த்வயத்தை ஸதா அநுஸந்திப்பதனால் துடிப்பது போல அசையும் திருப்பவளத்தை (வாயை) உடையீர்; அதன் ஆழ்பொருளைச் சிந்திப்பதனால் மயிர்க்கூச்செறியும் திருமேனியையுடையீர்) என்று தினசர்யையில் போற்றப்படுவது காணலாம்

த்வயத்தை ஆசார்யன் உபதேசிக்கும் போதுத் திரும்பச் சொல்லுவதால் நாம் எம்பெருமான் திருவடிகளில் சரணாகதி பண்ணியவர்களாகிறோம். த்வயத்தின் (இரு வாக்கியங்களில்) முன்பாதி மந்த்ரத்தினால் எம்பெருமானின் திருவடிகளை பெரிய பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு புகலாகப்பற்றுகிறோம். பின்பாதியினால் திவ்யதம்பதிகளின் மகிழ்ச்சிக்குறுப்பாக நித்யகைங்கர்யம் பண்ணும் பேற்றை யாசிக்கிறோம். எல்லாக்காலங்களிலும், எல்லாவிதமான கர்யங்களும் (மனம், மெய், வாக்கு இவை கொண்டு செய்பவை) உத்தேச்யமே.

**யாகம்** என்பது எம்பெருமானுக்கு திருவாராதனம் ஸமர்ப்பிப்பதை. இதை **இஜ்யை** என்றும் சொல்வர். நம்மை எம்பெருமானிடத்தில் ''இவன் ஸ்ரீ வைஷ்ணவன்; **ராமாநு**

ஜீய: (இராமானுசனடியான்); இவனை மங்களாசாஸன பரனாகஏற்று இவன் கையால் திருவராதனம் கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்து ஏற்றுக் கொள்ளப்பண்ணுகிறார் நமது ஆசாரியார்.

பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவன் ஸ்ரீ வைஷ்ணவதீக்ஷை பெற்றவனாகிறான். எம்பெருமானாரின் திருவடி ஸம்பந்தம் பெற்று "இவன் நம்மவன்" என்ற அவரால் அபிமானிக்கப் பெற்றவனாகிறான். எம்பெருமானாரடியார் யாவருக்கும் பேறு நிச்சயம் என்று "பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே" எனப்பட்ட திருவரங்க செல்வனுடைய திருவாக்காகும். ஸமாச்ரயணத்தின் போது ஆசார்யனால் பெறும் ஐந்து ஸம்ஸ்காரங்களும் நம்மைத் தூய்மை பெறச் செய்து ஸ்ரீ வைஷ்ணவ ஜன்மத்தைத் தருகின்றன. ஸ்ரீ வைஷ்ணவனை எல்லா தேவதைகளும் கௌரவிக்கின்றனர். யமபடர்கள் இவனிடம் வர நடுங்குவார்கள். இவர்கள் மேலான பரமபதத்தையே அடைவார்கள்; யமலோகப்ராப்தி இல்லை. ஸகல ப்ரமாணங்களும் இசையும் இந்த ஸம்ஸ்காரங்களை நாம் அடைவது மிகவும் அவசியம். இது பகவதாஜ்ஞையும் கூட. எம்பெருமானிடம் சிறிதேனும் அன்புள்ளவன் அவன் ஆஜ்ஞையைக் கடக்க மாட்டானன்றோ?

ஆசார்யனிடம் ஸமாச்ரயணமாகி ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணங்களுடன் எம்பெருமானுக்குத் தினமும் திருவாராதனம் ஸமர்ப்பித்தல் இன்றியமையாதது. எம்பெருமானுக்கு நிவேதனம் செய்யப் படாத உணவைப் புசிப்பது பாபமாகும். திருவாராதனத்தை, நமக்குள்ள அவகாசத்திற்கு தகுந்தாற் போல் அமைத்துக் கொள்ளலாம். கைங்கர்யத்தில் ஊற்றமே மிகவும் அவசியமானது.

(தொடரும்)

# ஸ்ரீபாஷ்ய ஸாரம்

## சாஸ்த்ரயோநித்வாதிகரணம்

ஜந்மாத்யதிகரணமென்கிற கீழதிகரணத்தில் பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமென்று தேறிற்று. இப்படிப்பட்ட லக்ஷணத்தோடு கூடிய பரப்ஹ்மமானது ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் தெரிந்துகொள்ளப்படாமற் போனாலும் அநுமாந ப்ரமாணத்தினால் ஸித்திக்கக் குறையில்லாமையாலே

---

P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

---

அப்படி அநுமாநப்ரமாண ஸித்தமாகின்ற அந்த பரப்ரஹ்மத்தை வேதாந்த வாக்யங்களினால் விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை என்றொரு ஆக்ஷேபந்தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த மூன்றாவது அதிகரணம் அவதரிக்கின்றது.

**சாஸ்த்ரயோநித்வாத். 1-1-3**

*சாஸ்த்ரத்தை யோநியாகக் கொண்டபடியாலே—என்பது ஸூத்ரத்தின் பொருள். யோநியாவது காரணம்; அறிவதற்குக் காரணம் என்கிற விவக்ஷையினால் இங்கு யோநி சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது—ப்ரமாணம் என்றபடி. சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டபடியாலே என்றதாயிற்று.* "**அப்பக்ஷோ வாயுபக்ஷ**" *என்னுமிடங்களில் 'தீர்த்தத்தைக் குடிப்பவன், வாயுவை பக்ஷிப்பவன்' என்று சப்தார்த்தமானாலும்* "**அஸதி பாதகே ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்**" *என்கிற ந்யாயத்தினால் "தீர்த்தமொன்றையே குடிப்பவன், வாயுவை மாத்திரமே பக்ஷிப்பவன்" என்று பொருள் தேறுவது போல, இங்கும் "சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்டபடியாலே" என்றதாகப் பொருள் தேறும். ஆகவே, "சாஸ்த்ர* **மேவ** *யோநி: (ப்ரமாணம)* **யஸ்யதத்**—*சாஸ்த்ரயோநி:* **தஸ்ய** *பாவ:—சாஸ்த்ரயோநித்வம்; தஸ்மாத்—சாஸ்த்ர யோநித்வாத்" என்று ஸமாஸம் கொள்ளப்பட்டதாயிற்று. பரப்ரஹ்மமானது அநுமாநத்தை ப்ரமாணமாகக் கொண்டதாகாமல் சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்ட*

தாகையினால் அப்படிப்பட்ட (வேதாந்த) சாஸ்த்ரத்தினால் பரப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டியது அவச்யமே என்பதாக ஸூத்ரத்தின் பொருள் முடிந்து நின்றது.

**இங்குப் பூர்வபக்ஷம் :—"அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்"** என்பர் சாஸ்த்ர வித்துக்கள், வேறு எந்த ப்ரமாணத்தினாலும் ஏற்படாத விஷயத்தில்தான் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்கும் - என்பது இதன் தாத்பரியம். இதன்படி பார்த்தால், பரப்ரஹ்மமானது வேறு எந்த ப்ரமாணத்தினாலும் ஸித்தியாமலிருந்தால்தான் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்குமென்றும், வேறு ஏதேனுமொரு ப்ரமணத்தினால் ப்ரஹ்மம் ஸித்தித்துவிட்டால் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்தியாது என்றும் தேறுகின்றது. பரப்ரஹ்மமோ அநுமாந ப்ரமாணத்தினால் ஸித்திக்கக் கூடியதாக இருக்கின்றது. எங்ஙனேயென்னில் **"பூம்யங்குராதிகம் ஸகர்த்ருகம்— கார்யத்வாத்; கடவத்"** என்பது அநுமாநசரீரம். உலகத்தில் நாம் காண்கிற எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவையுடையன; கர்த்தாவொருவனில்லாமல் எந்தப் பொருளும் உண்டாவதில்லை: வீடு, பானை, துணி முதலிய எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவை முன்னிட்டே உண்டானவையென்பதை அறிகிறோம். இதனால் கர்த்தாவொருவனில்லாமல் எந்தப் பொருளுமுண்டாகாதென்கிற உறுதி தோன்றுகின்றது. உடனே மற்றொன்றும் கவனிக்கிறோம்: வீட்டைக் கட்டினவனாக ஒரு கர்த்தா நமக்குத் தெரியவந்தாலும் அந்த வீடு எந்த நிலத்தில் கட்டப்பட்டதோ அந்த நிலத்திற்கு எவன் கர்த்தா என்பது நமக்குத் தெரியவில்லை. வீடு கட்டக் கருவியாயிருக்கின்ற மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தா இன்னானென்று அறிகின்றிலோம். பானையைச் செய்பவன் குயவனென்று காண்கிறோமானாலும் அந்தப் பானைக்கு உபாதாந காரணமான மண்ணைப்படைத்தவன் இன்னானென்று அறிகின்றிலோம். துணிக்குக் கர்த்தா ஒரு சேணியனென்று அறிகின்றோமானாலும் அதற்கு

உபாதாந காரணமாகிய பஞ்சைப் படைத்தவன் இன்னுனென்று அறிகின்றிலோம். ஆனால் கர்த்தாவொருவனில்லாமல் ஒரு காரியப் பொருளுமுண்டாகாததனால் கீழ்ச் சொன்ன மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தாவொருவன் இருந்தே தீரவேண்டும். அவன்தான் ஈச்வரனென்பவன்—என்று இவ்விதமாக ஈச்வரனை யறிவதானது அநுமான ப்ரமாணத்தினாலறிவதாகும். ஆக, இப்படிப்பட்ட அநுமாநமென்னும் ப்ரமாணத்தினால் ஈச்வரன் ஸித்திக்கவே, இப்படி ப்ரமாணாந்தர ப்ராப்தமாய்விட்ட ப்ரப்ரஹ்மத்தின் விஷயத்தில் சாஸ்த்ரமென்னும் ப்ரமாணம் ப்ரவர்த்திக்கமாட்டாது; ஏனெனில், "**அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்**" என்றன்றோ நியமமுள்ளது. ஆக, வேதாந்த சாஸ்த்ரமானது ஜகஜ்ஜந்மாதிகாரணபூதமான ப்ரஹ்மத்தினிடத்திலே ப்ரமாணமாக முடியாததனால் அந்த வேதாந்த சாஸ்த்ர விசாரரூபமான ப்ரஹ்ம விசாரம் செய்யத் தக்கதன்று—என்பதாகப் பூர்வ பக்ஷம் ப்ராப்தமாக, **இதற்குமேல் ஸித்தாந்தம் வருமாறு :**

அநுமானத்தினால் ஒன்றை ஸாதிப்பதானால் அது செவ்வனே ஸித்திக்கக்கூடிய விஷயமன்று. அநுமானத்தினால் ஈச்வரனே ஜகத்கர்த்தாவாக ஸித்திக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏனென்னில்: விச்வாமித்ரமுனிவர் தவ வலிமையினால் மிகுந்த பெருமை பெற்று நூதநஜகத்ஸ்ருஷ்டி பண்ணினாரென்பதை நாம் ஸ்ரீராமாயணாதிகளில் வாசிக்கின்றோம். ***அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி*** இத்யாதி ச்லோகங்கள் பல அறிந்தனவே. அம்முனிவர் ஒரு ஜீவவ்யக்தியேயல்லது ஈச்வரனல்லர்! இதனால் ஜீவகோடியிலேயே அதிசயித்த சக்தி படைத்த சிலர்க்கு விசித்ர ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ண ஆற்றலுண்டு என்பது தேறுகிறபடியால், கீழே காட்டிய அநுமானத்தினால் ஈச்வரனே ஜகஜ்ஜந்மாதிகாரண பூதனாக ஸித்திக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. விலக்ஷண சக்தி

யுக்தனுன சேதநனே ஸ்ருஷ்டிகர்த்தாவாகத் தேறலாமாதலால் அநுமாநம் ஈச்வர ஸாதானத்தில் சக்தியுடையதன்று; ஆகவே சாஸ்த்ரமே பர ப்ரஹ்மஸித்தியில் ப்ரபல ப்ரமாணமாகக் கடவது, அப்படிப்பட்ட சாஸ்த்ரம் வேதாந்த சாஸ்த்ரமே. அதைக்கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்வது நன்ருகப் பொருந்தும் என்றதாயிற்று. — ... (3)

சாஸ்த்ரயோநித்வாதிகரண ஸாரார்த்தநிருபணம் முற்றிற்று.

## 4. ஸமந்வயாதிகரணம்

பரப்ரஹ்மமானது சாஸ்த்ரம் தவிர வேருெரு பிரமாணத்தினுல் ப்ராப்தமாகக் கூடியதன்று என்றே கொண்டாலும் அந்த ப்ரஹ்மமானது ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு விஷயமல்லாமையினுல் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை ப்ரதிபாதநம் செய்வதில் பலனென்று மில்லாமையினுல் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் சாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாததலால் அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ர ப்ரதிபாத்யமாவதற்கு வழியில்லை என்ருெரு ஆக்ஷேபம் தோன்ற அதற்குப் பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது.

### தத்து ஸமந்வயாத் 1-1-4

இந்த ஸூத்ரத்தில், ப்ரஹ்மண,' என்ருெரு பதமும் 'சாஸ்த்ரேண' என்ருெரு பதமும் அத்யாஹாரம் செய்து கொள்ள வேண்டும். (அதாவது, வருவித்துக்கொள்ள வேண்டுமென்றபடி.)

**தத்**—கீழ் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட சாஸ்த்ர ப்ரமாணகத்வமானது என்றபடி. **ஸமந்வயாத்**—நன்ருகப் புருஷார்த்தமாக அந்வயிக்கிறபடியினுல் என்றபடி. புருஷார்த்

தத்வேதநஸம்பந்தமே ஸமந்வயமாவது. பரப்ரஹ்மமானது சாஸ்த்ரத்தினுல் புருஷார்த்தமாக ப்ரதிபாதிக்கப்படுகிறபடியினுலே அந்த ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ர ப்ரமாணகத்வம் ஸம்பவிக்கக் குறையில்லை என்றதாக ஸூத்திரத்தின் பொருள் தேறிற்று.

**இங்குப் பூர்வபக்ஷம்;**—பரப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வேண்டுமாஞல் அது வேறொரு ப்ராமணத்தினுல் அறியப்படாமலிருக்க வேணுமென்பது தவிர மற்றொரு தன்மையும் அதில் இருக்கவேணும். அது என்னென்னில்; தெரிந்துகொள்ள விரும்பக் 'கூடியதாயிருத்தல் என்கிற தன்மையாம். தெரிந்துகொள்ள வேணுமென்கிற விருப்பம் எந்த வஸ்துவில் உண்டாகின்றதில்லையோ அந்த வஸ்துவைப்பற்றி சாஸ்த்ரம் ப்ரதிபாதநம் செய்யமாட்டாதன்றே. பரபரஹ்மம் இதர ப்ரமாணத்தினுல் தெரிந்துகொள்ள முடியாததென்பதை ஒப்புக்கொள்வோம்; தெரிந்துகொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிற தன்மை ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்கமுடியாதே. ஏனென்னில்; தெரிந்துகொள்ள வேணுமென்கிற விருப்பமானது உலகில் ப்ரயோஜநவத்தான 'விஷயத்தில்தான் உண்டாகும். இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட பரிஹாரம் என்கிற இரண்டோ இரண்டத்திலொன்றே உலகில் ப்ரயோஜனமென்னத் தகுந்தது. இஷ்ட ப்ராப்தியானது ப்ரவ்ருத்தியினுலே விளையக்கூடியது. (யாகமென்கிற 'காரியத்தில் ப்ரவ்ருத்தியுண்டாஞல் ஸ்வர்க்கமென்கிற இஷ்டம் ப்ராப்தமாகிறது.) ப்ரவ்ருத்தியினுல் இஷ்ட ப்ராப்தியாவது போல, நிவ்ருத்தியினுல் அநிஷ்டபரிஹார முண்டாகிறது. (மாம்ஸ பக்ஷணமென்கிற காரியத்தில் நிவ்ருத்தியுண்டாஞல் அநிஷ்டபரிஹார முண்டாகிறது.) ப்ரக்ருதத்தில், பரப்ரஹ்மமானது ப்ரவ்ருத்திக்கோ நிவ்ருத்திக்கோ இலக்கன்றே. (வஸ்துவே கண்ணுக்குத் தெரியாமையினுல்,). ஆகவே ப்ரயோஜநவத்த்வம் சொல்லமுடியாது. ஆதலால், தெரிந்து

கொள்ள விரும்பக்கூடியதாயிருத்தல் என்கிற தன்மை பரப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்கமுடியாதாகையாலே அந்த ப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வல்லதல்ல; ஆகவே சாஸ்த்ரத்தைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யப் புகுவது ஒவ்வாது—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக;

இதன்மேல் **ஸித்தாந்தம்** வருமாறு:—பரப்ரஹ்மத்திற்கு ப்ரயோஜநாந்தரவத்த்வம் ஸம்பவியாமற்போனாலும் பல பல வேதாந்த வாக்யங்களினால் அதுதானே ஸ்வயம் ப்ரயோஜநம்—பரம புருஷார்த்தம் என்று அறிவிக்கப்படுகிறது. "**புத்ரஸ் தே ஜாத:**" (உனக்குப் பிள்ளை பிறந்தது) என்றும், "**தவ க்ருஹே நிதிரஸ்தி**" (உன் வீட்டில் நிதியுள்ளது) என்றும் சொன்னால் இந்த வாக்யங்களானவை பரமானந்த ஹேதுவான புத்ர ஜன்மத்தையும் நிதிஸத்பாவத்தையும் தெரிவிப்பது போல வேதாந்த வாக்யங்கள் பரமாநந்தத்திற்கு ஹேதுபூதமும் பரமாநந்தஸந்தோஹ ஸ்வரூபமுமான ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிப்பது ஸமஞ்ஜஸமேயாகும். அவை அபௌருஷேயங்களாகையாலே புருஷ புத்தியடியாக வரக்கூடிய ப்ரம ப்ரமாத விப்ரலிப்ஸைகள் அங்கு எண்ணத் தகாதவை. ஆகவே பொய்சொல்லி வஞ்சிக்கும் பேச்சுக்களல்ல வேதாந்த சாஸ்த்ரங்கள்; அப்படிப்பட்டவற்றைக் கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்வது பொருத்தமே யென்றதாயிற்று.

இந்த அதிகரணத்தின் ப்ரமேயத்தை யுட்கொண்டு பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் (21) "**அத்ராஸ்தே நிதிரிதிவத்—ரங்கசே! த்வயி ஸகலாஸ் ஸமந்வயக்ஷே**" என்கிற ச்லோகத்தையருளிச் செய்துள்ளார். அங்கு எம்முடைய வியாக்கியானத்தில் விரிவு நோக்கத் தக்கது.

ஸமந்வயாதிகரண ஸாரார்த்த
நிரூபணம் முற்றிற்று.